தர வேண்டி வணங்கி விடை பெறுகிறேன்.

வாழ்க தங்கள் சேவை
வளர்க தங்கள் புகழ்.

**பாலா - தனேஸ்வரி குடும்பத்தினர்,**
**கனடா**

ஆண்டவர் என் ஆயர் எனக்கேதும் குறையில்லை.

# அருட்பணியாளனே அண்ணாவே!

"நானே திராட்சைச்செடி
நீங்கள் அதன் கிளைகள்"
என்ற ஏசு பெருமானின்
பேராசி பெரும்பேறு பெற்ற
திராட்சையூர் மண்ணதனில்
"அறுவடையோ மிகுதி
வேலையாட்களோ குறைவு" என்ற
ஆண்டவனின் அழைத்தலை
நிறைவாய் ஏற்று இறைபணியாற்ற
எத்தனை அடிகளார்கள் அர்ப்பணித்த
திராட்சையூர் மண்ணே வாழ்க.

சந்தியாகுவே எம்பதிதனில்
நீர் வீசிய வலைகளால்
ஆத்தும வாழ்வுக்காய்
மனிதரைப் பிடித்து
மனமாற்றம் காணவே
பின்சென்று பேறு பல பெற்று
குருத்துவப் பணியாற்றும்
மனித மேய்ப்பர்களை
மனதார வாழ்த்துகின்றோம்.

யோசேப்பு யக்கோவா
மூத்த புதல்வனாய்
கருவறையில் கருத்தாங்கி
முத்தாய் பெற்றெடுத்து
புவிதனில் குருவாய் உருவாக்கி
இறைமகனின் மறைபணியாற்ற
ஈசனுக்காய் ஈந்த
பேறுபெற்ற பெற்றோரே
வாழ்த்து பெற்று வணங்குகிறோம்.

ஆண்டவனின் அருட்பணியாளனாய்
அர்த்தமுள்ள அழைத்தல் பணிக்காய்
அத்தனையும் துறந்து நீங்கள்
மெய்யியலும் இறையியலும்
மேன்மையான மேற்படிப்பும்
கற்க கசடற கற்றபின்பு
கர்த்தரின் காலடியில்
செவ்வனே சேவைகள் செய்யும்
நிகரில்லா நின் பணிகளை
நெஞ்சார வாழ்த்தி வணங்குகின்றோம்.

யுத்தகாலத்திலும் நித்தமும் ஓயாது
வன்னி மண்ணதிலே
விண்ணவன் பணிசெய்து
இடம்பெயர்ந்தோர் இடர் நீக்க
அயராது அரும் பணியாற்றிய
அருட்பணியாளனே அண்ணாவே
தம்பி தங்கையர் நாம்
அன்புடன் வாழ்த்துகிறோம்.

பெற்ற தந்தை மறைந்தாலும்
மூத்தவர் நீங்கள் அருட்தந்தையாய்
தந்தையில்லா குறைநீக்கி
ஆசானாய் ஆன்மீகத் தந்தையாய்
அன்பும் பாசமும் தந்து
விளக்காய் விடிவெள்ளியாய்
வாழ்வின் வழிகாட்டியாய்
குறையில்லா நிறைவாழ்வு
வாழச் செய்கிறீர்.

பங்குத்தந்தையாய் பல பங்குகளில்
பரமன் பணிசெய்து புகழ்பரப்பி
ஆண்டவனுக்கு ஆலயங்கள் அமைத்து
ஆன்மீகப் பணியதை ஆவலுடன்
மக்கள் மனம் மகிழச் செய்தீர்

"உலகெல்லாம் சென்று
நற்செய்தியை பறைசாற்றுங்கள்"
என்றுரைத்த உத்தமன் யேசுவின்
உன்னத பணிக்காய்
ஊர்விட்டு உறவுகளைத் துறந்து
அமெரிக்க தேசமதில்
ஆத்துமப் பணிசெய்து
ஓரேகான் மாநிலத்தில்
ஒரே தேவன் மறை பரப்பி
நல்ல மேய்ப்பன் வழியே
நற்பணிகள் செய்கிறீர்.

குருத்துவத்தின் மகத்துவம் பேணி
மருத்துவராய் ஆன்ம மருந்தளித்து
புன்னகை பூத்த முகத்தால்
புண்பட்ட மனங்களை மாற்றும்
தங்களின் தனித்துவமே
குருத்துவத்தின் மகத்துவம்.

இறைவனின் தோட்டமதில்
இறைபணியின் நெறியோடு
இருபத்தியந் தாண்டுகள்
வெள்ளிவிழாக் காணும்
வெற்றி நாயகனே
இலக்கை நோக்கிய – நின்
இலட்சியப் பயணமதில்
இறையருளும் நிறைவாழ்வும்
நீளாயுள் நலவாழ்வும்
நிறைவாய் நீவிர் பெற்று
புனிதன் புகழ்பரப்பும்
புனிதப் பணியதனை
வெற்றிப் பவனியாய்
மேன்மேலும் தொடர்ந்திடவே
மெசியாவை விசுவாசித்து
மன்றாடி ஜெபிக்கின்றோம்.

**டாக்டர் போல் யோசேப்**

**மற்றும் சகோதர சகோதரிகள்**

உண்மையிலேயே உம்மை நம்பும் எவரும் வெட்கமுறுவதில்லை.

# திராட்சையில் கனிந்த நான்காம் குருவே

திராட்சையில் கனிந்த
நான்காம் குரு நீ
வெற்றிலையிலே துளிர்விட்டு
ஆன்மீகத்தையே சுவாசித்து
இருபத்தைந்து ஆண்டுகள்
துறவறம் சுமந்தவனே.

செந்நீரில் கண்ணொளியாய்
செம்ண்ணில் சிந்தனை
சிவந்தவன் நீ - போரில்
சிதறுண்ட உறவுகளை
உலகமெல்லாம் சென்று
கிறீஸ்தவத்தில் இணைத்தவன் நீ

குருதி எடுத்த பூமியிலும்
குருத்துவம் சுமந்தவன் நீ
முதற் போராளி மோகனுக்கும்
ஞான உபதேசம் செய்தவன் நீ
சிவந்த திராட்சையைப் போல்
பசுமையான வெற்றிலையைப் போல்
உனது பணி நிலைக்கும்
என்பது உறுதி.

றனிஸ் தியோகு
பிரான்ஸ்

# 'Service to Men is service to God'

Hearty greetings from teh bottom of heart to Rev. Joseph Maria Sebestian on the grand event of 25th Silver Jubilee Celebration of Preiesthood. Great men are meteors to flash the lights of life to common men and women! That's why it has been quoted as 'Service to Men is service to God'

This has been gifted and proved by the untiring devoted services of Rev. Joseph Maria Sebastian's devine social and religious services for the past 25 years! No doubt, except to praise your morality which will remain till our last breath! Which earmarks as teh symbol of celebrity on your 25th year with green memory of your past glory and acheivements to respect you as our own master.

Since we seek your Holy Blessings on this happy occasion as you are the blessed one with all qualities of services to shape our communal integrity for progress and prosperity. You have made a seperate identity to show the path of God's commandments so as to acquire the discipline of life with religious spirit of mankind - We learned the text of Love, help to all, pray for Universal Peace and Harmony as well respect each other - which will be the beacon light reflecting your great deeds through out our life as the vision and mission of goodwill to attain the perfection in our life.

May God Bless you with the same spirit of long life so as to guide our future generation with your valueless experience and knowledge for prosperity.

With good wishes

**Puthuvai Raman, Canada**

| | |
|---|---|
| முழுப்பெயர் : | அருட்தந்தை யோசேப்பு மரிய செபஸ்ரி |
| தாய் : | திருமதி. யக்கோவா யோசேப்பு |
| தந்தை : | பிரான்சிஸ் யோசேப்பு |
| பிறந்த திகதி : | 07 – ஆடி – 1954 |
| சகோதர சகோதரிகள் : | திரு அன்ரன் தேவதாஸ்<br>திருமதி. இமெல்டா சகாயராணி<br>திருமதி எட்விஸ் றூபி<br>டாக்டர். போல் யோசேப்<br>திரு. பீற்றர் கோமஸ்<br>திரு. யேசுநாயகம்<br>திரு. கிறிஸ்ரி பிரான்சிஸ் |
| ஞானப் பெற்றோர் : | திரு திருமதி சுவாம்பிள்ளை |
| ஆரம்ப கல்வி : | இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம் |
| உயர் கல்வி : | புனித என்றியரசர் கல்லூரி இளவாலை |
| ஆங்கில கல்வி : | புனித. மாட்டீனார் சிறிய குருமடம், யாழ்ப்பாணம் |
| மெய்யியல் கல்வி : | திரு இருதய குருத்துவ கல்லூரி, பூந்தமல்லி, சென்னை, இந்தியா |
| இறையியல் கல்வி : | தேசிய குருத்துவக் கல்லூரி, அம்பிட்டியா, கண்டி, இலங்கை<br>புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, கொழும்புத்துறை, யாழ். இலங்கை |
| மேற்கல்வி : | மேரி மவுண்ட் பல்கலைக்கழகம், கலிபோர்னியா, அமெரிக்கா |
| குருத்துவ அபிஷேகம் : | ஆவணி– 06– 1985 |
| குருமடம் சென்றது: | வணபிதா டெய்சி அவர்களின் ஆசியுடன் |

நீதிமான்களே, ஆண்டவரை முன்னிட்டு அகமகிழுங்கள்.

குருவாக திருநிலைப்படுத்தல்:

வணபிதா ஸ்பொம்பதி அவர்களின் ஆசியுடன்
மேன்மை தங்கிய ஆயர் தியாகுப்பிள்ளை அவர்களால்

உதவி பங்குத் தந்தை : காணிக்கை மாதா ஆலயம், மயிலிட்டி
புனித மரியன்னை பேராலயம், யாழ்ப்பாணம்

தற்காலிக பங்குத்தந்தை : புனித அந்தோனியார் ஆலயம், பரந்தன்

பங்குத் தந்தை : புனித அந்தோனியார் ஆலயம், தாழையடி

இணைப் பங்குத்தந்தை : திருக்குடும்ப ஆலயம், மல்வம், மானிப்பாய்

பங்குத் தந்தை : புனித சூசையப்பர் ஆலயம், வட்டக்கச்சி

பங்குத் தந்தை : புனித அந்தோனியார் ஆலயம், தர்மபுரம்

*2001 – 2003 உதவி பங்குத்தந்தை :*

சாந்தா மரியானா பங்கு, பிக்கோரிவேரா, லொஸ் ஏஞ்சலஸ்,
கலிபோனியா, அமெரிக்கா

*2003 – 2006 உதவி பங்குத் தந்தை :*

சாந்தா மதலேனா பங்கு, பொமோனா, லொஸ் ஏஞ்சலஸ்,
கலிபோனியா, அமெரிக்கா

*2006 – இன்றுவரை பங்குத்தந்தை :*

திரு இருதய ஆலயம், ரிலமூக், போட்லாண்ட்
புனித சூசையப்பர் ஆலயம், குலோவர்டேன் போட்லாண்ட்
புனித. மேரிஸ் ஆலயம், றெக்ஸ்வே, போட்லாண்ட்,
ஒரேகான் மாநிலம், அமெரிக்கா

குருத்துவ வெள்ளி விழா : ஆவணி – 06 – 2010 – சென் யேம்ஸ் பங்கு, இளவாலை
ஆவணி– 21 – 2010 – பிரான்ஸ்
புரட்டாசி – 05 – 2010 – பணிபுரியும் பங்கு,
ரிலமூக், போட்லாண்ட், அமெரிக்கா

தொகுத்தவர்:
**கிறிஸ்ரி பிரான்சிஸ் ஜோசேப்**
**பாரிஸ், பிரான்ஸ்**

அவரது புகழ் எப்போதும் என் நாவில் ஒலிக்கும்.

# வரலாற்று வழித்தடத்தில் சில துளிகள் ...

அருட் தந்தை யோசேப் மரிய செபஸ்ரி அவர்கள் பிரான்சீஸ் யோசேப் - யக்கோவா தம்பதியரின் மூத்த புதல்வனாய் 7 யூலை 1954 இல் பிறந்தார். திராட்சையும், வெற்றிலையும் வளமாய் விளையும், புனித யாகப்பரை பாதுகாவலராகக் கொண்ட திராட்சையூர், இளவாலை மண்ணதிலே தோன்றிய அவர் தனது ஆரம்பக் கல்வியை இளவாலை திருக் குடும்ப கன்னியர் மடத்திலும், உயர்கல்வியினை இளவாலை புனித என்றியரசன் கல்லூரியிலும் பயின்று வந்த வேளையில் அப்போதே ஆலயப் பணிகளிலும், சமூக நலப்பணிகளிலும், இளைஞர் மன்றங்களிலும் பணியாற்றி வந்தார். அதே வேளையில் தந்தையைப் போல உதைபந்தாட்டத்திலும் சிறந்த வீரனாக விளையாடி கல்லூரிக்கு பல பெருமைகள் சேர்த்தார். இதே வேளையில் தான் பங்குத்தந்தை வணபிதா டெய்சி அடிகளாரின் வழிகாட்டலிலும் ஊக்கத்திலும் தேவ அழைத்தலுக்கு தன்னை தயார்படுத்திக் கொண்டு யாழ் புனித மாட்டீனார் சிறிய குரு மடத்தில் தனது ஆங்கிலக் கல்வியியையும், ஆரம்பக் குருத்துவ கல்வியையும் படித்துத் தேறினார். அதன் பின்னர் குருத்துவ உயர் கல்விக்காக சென்னை, இந்தியாவிலுள்ள திருஇருதய குருத்துவக் கல்லூரியில் சேர்ந்து மெய்யியலில் பட்டம் பெற்று பின்னர் தாயகம் திரும்பி கண்டி தேசியக் குருத்துவக் கல்லூரியிலும், கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் இறையியல் பயின்று அதிலும் தேர்ச்சி பெற்று தியாக்கோனாகி பயிற்சிகள் பெற்று குருத்துவப் பணிக்கு தன்னை தயார் படுத்தினார்.

அதிவணக்கத்துக்குரிய ஆயர் தியோகுப்பிள்ளை அவர்களால் யாழ் பேராலயத்தில் 6 ஆகஸ்ட் 1985 அன்று குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். அப்போது வணபிதா ஸ்பொம்பதி யோன் அவர்கள் பங்குக் குருவாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பிறந்த மண்ணின் பெருமை சேர்க்க வணபிதாக்கள் டேமியன், இராசநாயகம், அன்ட்ரூ ஆகியோரைத் தொடர்ந்து நான்காவது அருட்பணியாளனான ஊராரின் உற்சாக வரவேற்பிற்கு மத்தியில் புனித யாகப்பர் ஆலயத்தில் முதல் திருப்பலியும் நிறைவேற்றினார்.

உதவிப் பங்குத் தந்தையாக தனது இறைபணியை காணிக்கை மாதா ஆலயம், மயிலிட்டி புனித மரியன்னை பேராலயம் - யாழ்ப்பாணம், புனித அந்தோனியார் ஆலயம் - பரந்தன் ஆகிய இடங்களில் சிறப்பாக செய்தார். தனது இனிய குரல் வளத்தால் ஆலயங்களில் பாடற்பயிற்சி, விளையாட்டுத் திறமையால் இளைஞர்களுக்கு உதைபந்தாட்ட பயிற்சி, உளவியல் ஞானத்தால் இளைஞர்களுக்கு நல்வழிகாட்டல் போன்றவற்றில் சிறந்து விளங்கியவர் புனித அந்தோனியார் ஆலயம் தாளையடியில் பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்று ஆலய, ஆன்மீக, கிராமநலன், கல்வி போன்றவற்றில் மக்கள் முன்னேற அரும்பாடுபட்டு தாளையடி மக்களின் நன்மதிப்பைப் பெற்றார். அதன் பின்னர் திருக்குடும்ப ஆலயம், மல்வம், மானிப்பாயில் இணைப் பங்குத்தந்தையாக சிலகாலம் பணியாற்றினார். பின்னர் புனித சூசையப்பர் ஆலயம் - வட்டக்கச்சி, புனித அந்தோனியார் ஆலயம் - தர்மபுரம் போன்ற இடங்களில் பங்குத் தந்தையாக பல காலம் பணியாற்றினார். வன்னியிலும் யுத்தசூழலிலும் பாதிக்கப்பட்ட மக்கள், இடம்பெயர்ந்த மக்கள், ஏதிலிகள் போன்றோர்க்கு சமய, சமூக வரம்புகளைக் கடந்து அவர்களின் நலன்களை பேணுவதில் அக்கறை கொண்டு செயற்பட்டார். இதனால் பல தடவைகள் பல இன்னல்களுக்கு ஆளான அனுபவங்கள் நிறையவே உண்டு. என்னிடம் பல சம்பவங்கள் அதாவது இன்னலுற்ற நிகழ்வுகளை மிகவும் நகைச்சுவையாகச் சொல்வார். அவற்றை எழுதவேண்டுமென்றால் தனிப் புத்தகமே வெளியிடலாம்.

பின்னர் 2001 இல் தாயகத்தைவிட்டு அமெரிக்கா சென்று, உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள் என்ற ஆண்டவர் யேசுவின் ஆணைக்கு இணங்க கலிபோனியா மாநிலத்திலுள்ள சாந்தா மரியானா ஆலயத்தில் உதவிப் பங்குத் தந்தையாக பணியாற்றிக் கொண்டிருக்கும் போதே கலிபோனியா மேரிமவுண்ட் பல்கலைக் கழகத்தில் மேற்கல்வியும் பயின்று பட்டங்கள் பெற்றார். அதோடு மட்டுமல்ல ஸ்பானிய மொழியிலும் சிறப்புத் தேர்ச்சிபெற்று அந்த மொழியில் திருப்பலியும், மறையுரைகளும் ஆற்றி

லொஸ் ஏஞ்சல் ஸ்பானிய மக்கள் மத்தியில் பிரபலமானார். பின்னர் 20030–2006 காலப்பகுதியில் சாந்த மதலேனா ஆலயம் பொமோனா, கலிபோனியாவில் உதவிப் பங்குத் தந்தையாக பணியாற்றினார்.

அப்போதுதான் தாயகத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தமான ஆழிப்பேரலை என்ற சுனாமியினால் பெரும்பாலான உறவுகள் பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்டபோது அவர்களின் மறுவாழ்வுக்காக அமெரிக்க மக்களின் நிதியுதவியைப் பெற்று யாழ்மறை மாவட்டத்தின் மூலம் பேருதவி செய்ததை மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள். இதனைப் பாராட்டி அமெரிக்க செய்திப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.

2006 முதல் பங்குத் தந்தையாக அமெரிக்கா, ஒரேகான் மாநிலத்திலுள்ள, போட்லான்ட் மாவட்டத்தில் ரிலமூக் நகரிலுள்ள திருஇருதய ஆலயத்திலும், குலோவர்டேல் புனித சூசையப்பர் ஆலயத்திலும், புனித மேரிஸ் ஆலயம், றெக்ஸவேயிலும் தற்போது ஆன்மீக மேய்ப்பராக பணியாற்றி வருகிறார். தமிழ் மகனாகப் பிறந்து மேற்கண்ட ஆலயங்களில் பல்வேறு இன மக்களிடையே குறிப்பாக ஆங்கிலம், மற்றும் ஸ்பானிய மொழி பேசும் மக்களிடம் அவரவர்களின் மொழிகளில் சேவையாற்றி தனது இன்முக புன்சிரிப்பால் அனைவரையும் கவர்ந்து பண்புடன் பரமன் பணியாற்றி வருகிறார்.

எங்களின் தந்தையார் பிரான்சிஸ் யோசேப் அவர்கள் இல்லாத குறையை மூத்த சகோதரனாக இருந்து அவ்வப்போது ஆலோசனைகளை சொல்லி வழிகாட்டியாக இருந்து வருகிறார். அவர் செல்லமாக கோபித்துக் கொள்ளும் விடயம் என்னவென்றால் நாங்கள் அவ்வப்போது தொலைபேசியில் எடுத்து நலம் விசாரிக்கவில்லை என்றால் மட்டுமே!

தனது சகோதரர்களைவிட அவர்களின் பிள்ளைகளோடு தானும் ஒரு சிறுவன் போல சிரித்து மகிழ்ந்து கதைப்பார். அவர்களும் பாதர் பெரியப்பா, சுவாமி மாமா என்று கொஞ்சி மகிழ்வர். தூரதேசத்தில் இருந்தாலும் ஒவ்வொரு திங்கள் கிழமையென்றால் அவருக்கு மிக்க மகிழ்ச்சி. அன்றைக்கு என்றுமில்லாத மகிழ்ச்சியோடிருப்பார். எனக்கும் பலமுறை இது விளங்கவில்லை. பின்புதான் அதன் இரகசியத்தை கண்டு பிடித்தேன். திங்கள் கிழமைகளில்தான் அம்மாவோடு நீண்டநேரம் கதைப்பார். நான் இந்தியாவில் இருந்தபோது வருடம் ஒருமுறை விடுமுறைக்காக வந்து எங்கள் வீட்டில் தங்கியிருப்பார். அப்போது அம்மாவுடன் தொலைபேசியில் கதைக்கும்போது சில நேரங்களில் சின்னப்பிள்ளைபோல் அழுவதைப் பார்த்திருக்கிறேன். ஆம், அம்மாமேல் அவ்வளவு அன்பும் பாசமும் வைத்திருக்கிறார். எல்லாவற்றையும் துறந்த குருவுக்குள்ளும் ஒரு குழந்தை மனசு இருக்கிறது என்பது புரிந்தது.

இது ஒரு புறமிருக்க யுத்தகாலத்தில் மக்களுக்குள் பணியாற்றியபோது பல பிரச்சினைகளை எதிர்கொள்ள தான் செய்த சாகச சாதனைகளை என்னிடம் பலமுறை கூறியுள்ளார். நானே ஆச்சரியப்பட்டுப் போனேன். ஆம், இவர் உயிருடன் இருப்பதே இறைவனின் வல்லமைதான் என்பதை உணரமுடிந்தது. இப்படி இவரின் மறுபக்க வரலாறு மிகவும் நெடியதும் சுவாரஷ்யமானதும் ஆகும். இவரின் நகைச்சுவையுணர்வு பற்றி இவரின் குரு நண்பர்கள் சொல்லச் சொல்ல கேட்க ஆசையாகவிருக்கும்.

அருள்வாழ்வின் அறப்பணியில் இருபத்தைந்து ஆண்டுகள் அயராது ஆற்றிவரும் அரும்பணி இன்னும் பலப்பல ஆண்டுகள் தொடர்ந்து குருத்துவப் பணியில் ஐம்பது ஆண்டுகள், எழுபத்தைந்து ஆண்டுகள் என்று பல விழாக்கள் கண்டு வயதிலும் நூறாண்டுகள் கடந்து இறைபணியாற்றிட நீளாயுள், நிறைவாழ்வும், நலவாழ்வும் நிறைவாய்ப் பெற்று புனிதப்பணி தொடர இயேசுவின் நாமத்திலே விசுவாசத்தோடு ஜெபிக்கிறேன்.


**டாக்டர் போல் யோசேப்**

***கனடா***

***416. 438. 3939***


திரளான மக்களிடையே உம்மை புகழ்வேன்.

**குருக்கள் ஆண்டை முன்னிட்டு (யூன் 2009 – யூன் 2010) குருக்களை நன்றியோடு நினைவுகூரும் சில ஆக்கங்கள் (நன்றி: பாதுகாவலன்)**

# பணி வாழ்வு

குருக்கள் ஆண்டில் எம் குருக்களின் பணிகளை நன்றியோடு நினைவு கூருகின்றோம்

எமது மண்ணில் பல்வேறு துன்பங்கள் மத்தியிலும், தன்னலமற்ற சேவை புரிந்த குருக்களையும், குறிப்பாக 1987ம் ஆண்டு காலப் பகுதியில் மண்ணில் போர்ச் சூழலில் இடம்பெயர்ந்த மக்களை ஆதரித்து அவர்களுக்கு உணவு கொடுத்து இறந்தவர்களை குண்டுவீச்சுக்கள், செல்லெறிகள் மத்தியிலும் நல்லடக்கம் செய்து, மக்கள் இடம்பெயர்ந்து சென்ற பின்பும் வீடுகளில் எஞ்சியிருந்த முதியோருக்கு ஆறுதல் கூறி தம்மாலியன்ற உதவிகள் புரிந்த எம் அருட் தந்தையர்களை நன்றியோடு நினைவு கூருகின்றோம்.

வன்னி மண்ணில் போர்ச்சூழலுக்கு முற்பட்ட காலத்தில் ஒரு பங்குத்தந்தை 12 ஆலயங்களிற்கு பணியாற்றிய காலமும் உண்டு. பங்குத்தந்தை சனிக்கிழமை தொடக்கம் ஞாயிறு மாலை வரை ஞாயிறு திருப்பலி ஒப்புக் கொடுப்பார். கஷ்டப் பிரதேசம், சில வேளைகளில் அவர்களின் மோட்டார் சைக்கிளில் இடைநடுவில் நின்றுவிட்டால் எமக்கு அன்று திருப்பலி இருக்காது. அடுத்த ஞாயிறு அருட்தந்தை வந்து கேட்பார். "மோட்டார் சைக்கிள் பிழைத்து வழியில் நின்றேன். யாராவது வந்து பார்த்தீங்களா? என்று.

வன்னியில் மக்களை அடிக்கடி வருத்தும் "மலேரியா" எம் அருட் தந்தையர்களையும் விட்டு வைப்பதில்லை. *Father* க்கு காய்ச்ச்சல், பூசை வைக்க வரமாட்டார் என்ற தகவல் பல தடவைகளில் எமக்குக் கிடைக்கும்.

இப்படியான கஷ்டமான நிலைமைகளிலும் கூட பங்கின் பணிகளை குறைவற நிறைவேற்றி பங்கு மக்கள் ஒவ்வொருவரினதும் பிரச்சனைகளை கேட்டறிந்து உதவி புரிந்தும் பங்குகளில் குடும்பங்கள் குறைவாக இருந்தாலும் பங்குத் தந்தை ஒழுங்கான தாபரிப்பின்றி பற்றாக் குறையோடு இருந்தாலும் பங்குப் பணிகளை திருப்தியுடன் நிறைவேற்றி, பங்கு மறைக்கல்வி, முதல் நன்மை, உறுதிப்பூசுதல் உதவி புரிந்து பல்வேறு இடப் பெயர்வுகளையும் சந்தித்த மக்களுக்கு உணவு, உறைவிடம் கொடுத்து ஆறுதலளித்த அருட்தந்தையர்களை நினைவு கூருகிறோம்.

**"செல்லுங்கள் உலகெங்கும், சொல்லுங்கள் நற்செய்தி"** என்ற ஆண்டவர் இயேசுவின் அழைப்பிற்கு தம்மை முற்று முழுதாக கையளித்து எமக்கு அன்புப் பணிபுரியும் குருக்களின் குருக்களுடன் இறைவன் உடனிருந்து அவர்களை உறுதிப்படுத்தி அவர்கள் பணிவாழ்வில் ஏற்படும் போராட்டங்கள் மத்தியில் அவர்களைப் பாதுகாத்து வழி நடத்தவும் எமது பங்குகளிலிருந்தும் இறைவனின் அழைத்தலிற்கு செவிமடுத்து அன்புப் பணிபுரிய இறைவன் தாமே பலரைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றும் அறுவடையின் ஆண்டவரை அனுதினமும் வேண்டுகின்றோம்.

**ஜஸ்மின் – கரவெட்டி**

உன் வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்து விடு.

# இறைமனித உறவின் உயிருள்ள ஊடகம் குருக்கள்.

அன்னையாம் திருச்சபை குருக்களுக்கென ஓர் ஆண்டை அர்ப்பணித்து அவர்களுக்கென சிறப்பான முறையில் செபிக்கவும் அவர்களின் அர்ப்பணத்தைப் பாராட்டவும் உற்சாகப்படுத்தவும் அவர்களின் பணிகளை அங்கீகரிக்கவும் இன்னும் தங்களுடைய அர்ப்பணத்தில் ஆழ்படவும் இறையாட்சிப்பணியில் இன்னும் முனைப்போடு செயல்படவும் வழி வகுத்துள்ளது.

இன்றைய அறிவியல் உலகம் நாம் வாழும் இவ்வுலகத்தை வளர்ச்சியின் உச்சத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டதை நாம் மறுக்கமுடியாது. பல பன்முக வளர்ச்சிகளை நாம் பெற்றுள்ளோம். அனுபவித்தும் வருகின்றோம். சிறப்பாகக் கணணி உலகம் இவ்வுலகை ஒரு குக்கிராமமாக மாற்றி உள்ளது. ஊடகம் இன்றைய உலகை ஊடுருவி ஆட்சி செய்கிறது. ஊடக உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நொடிப்பொழுதில் செய்திகள் உலகம் முழுவதற்கும் எட்டிவிடுகிறது. எனவே திருச்சபையும் இவ்வூடக வளர்ச்சியை உற்று நோக்கி இறையாட்சி விழுமியங்களை இம்மண்ணில் பரப்பிட அதனைத் தனதாக்கிக் கொண்டும் இவ்வூடகத்தை அனைத்து மக்களும் குறிப்பாகக் குருக்கள் தங்களுடைய இறையாட்சிப் பணிக்கு சிறப்பாகப் பயன் படுத்திடவேண்டும் என்ற அழைப்பையும் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. இன்றைய திருச்சபை ஒரு டிஜிட்டல் திருச்சபை என்று சொல்லக் கூடிய அளவிற்கு திருச்சபை மின்னணு ஊடகங்களில் ஊடுருவியிருப்பதை நாம் கண்கூடாகக் காணமுடியும். இன்னும் அதிகமாக விரைவாக செய்திட அழைக்கப்படுகிறோம்.

ஊடக உலகம் ஆற்றல் வாய்ந்தது. இத்தகைய சக்தி வாய்ந்த ஊடக உலகில் ஒவ்வொரு குருவும் ஓர் ஊடகமாக, ஓர் உயிருள்ள தொடர்பு சாதனமாக தன் பணித்தளத்தில் வாழவேண்டிய பொறுப்பைப் பெற்றுள்ளார்.

ஒருவர் ஒரு தகவலை மற்றவரோடு பகிர்ந்து கொள்வதைத்தான் தொடர்பு என்கிறோம். இதைத் தனி மனிதத் தொடர்பு, இரு மனிதர்களுக்கு இடையேயான தொடர்பு, குழுத் தொடர்பு, வெகுஜனத் தொடர்பு அல்லது வெகுமக்கள் தொடர்பு என வகைப் படுத்தலாம். இதில் முக பாவனைகள், உடல் அசைவுகள், அடையாளங்கள், குறியீடுகள், மொழி ஒலி மற்றும் கருவிகள் சார்ந்தும் செய்திகளைப் பகிர்ந்து கொள்கிறோம். அருட்பணியாளரின் தொடர்பு இவை அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு குருவும் ஒரு கலைஞனாய் வாழ வேண்டும். கலைகளைக் கற்றவன் காலத்தை வென்றவன் என்று சொல்வார்கள். தொடர்புக் கலையை நன்கறிந்த அருட்பணியாளர் மிகச் சிறந்த வெற்றியான மக்கள் பணியாளராக வாழ முடியும்.

இன்றைய ஊடகங்கள் உருவாக்கவும், உருக்குலைக்கவும் செய்ய ஆற்றல் படைத்தவையாக உள்ளன. ஊடக உலகில் எப்படி வாழலாம், என்ன செய்யலாம், எதை வாங்கலாம், எதை உண்ணலாம், எப்படி சாப்பிடலாம், என்ன படிக்கலாம், எதை உடுக்கலாம், எப்படி உடையணிவது, என்ன சிந்திப்பது என்பதை எல்லாம் நம்மால் தீர்மானிக்க முடியவில்லை. அந்த அளவிற்கு நம்மையும், நம்மைச் சார்ந்தவர்களையும் வழி நடத்துவது இன்றைய வெகு மக்களுக்கான ஊடகங்கள்தான். நமது வாழ்க்கைத் தேவைகளை எல்லாம் தீர்மானிப்பது

நாமாக இருக்க முடியவில்லை. நமக்காக ஊடகங்கள் தீர்மானிக்கின்றன. நாம் விரும்பியோ விரும்பாமலோ இவ்வூடகக் கலாச்சாரத்தில் வாழ்ந்தே ஆகவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். தகவல் தொடர்பு நுட்பங்களும், சாதனங்களும் உலகை உள்ளங் கைக்குள் அடக்கி மக்களை இயந்திரத் தனமாக வாழவைத்து வருவதை நாம் உணரவேண்டும். உண்மையான ஊடகத் தேடலை நாம் ஆழப்படுத்திடவேண்டும். ஊடக விழிப்புணர்வை நாம் ஏற்படுத்தவேண்டும். ஊடகத்தை ஊடுருவிப்பார்க்கும்பார்வையையும், விமர்சனப்பார்வையையும் நாம் பெற்றிடவேண்டும். மக்களுக்கும் வழங்கிடவேண்டும்.

நாம் சரியான விமர்சனப் பார்வையை வளர்க்காமல் இருந்துவிட்டால் நாளைய நமது வாரிசுகள் புனையப்பட்ட அறிவைப் பெற்ற முட்டாள்களாகவும், மூட நம்பிக்கைகளின் மொத்த உருவங்களாகவும், இயந்திரத் தனமான உறவுகளைக் கொண்ட சமூகமாகவும், நவீன ஊடக அடிமைகளாகவும் வளர்த்தெடுக்கப் படுகிறார்களே என்ற ஆதங்கத்தையம், அதை வேரறுக்கவேண்டும் என்ற தாகத்தையும் கொண்டவர்களாக நாம் செயல்பட வேண்டும். ஊடகங்களை ஒதுக்கி வாழ்வது மூடத்தனம். ஊடகங்களை நாம் பயன்படுத்தி ஆகவேண்டும். ஆனால் அதில் நமது விமர்சனங்களையும், கருத்துக்களையும் பதிக்கும் வண்ணம் நமது மக்கள் பங்கேற்புகள் அமைய வேண்டும்.

*நன்றி: (2010 வத்திக்கான் வானொலி)*
*வத்திக்கான் செய்திகள்.*

# அவதரித்த குருக்களே

அருட் பணியாளர்களாக - தேவன்
இங்கிதமாக சேவை செய்து
ஈசன் வழி சமைத்திட
உள, உடல் உறுதி பெற்று
ஊர் ஊராய்ச் சென்று
எள்ளளவும் அஞ்சாமல்
ஏற்றமே கண்ணாக - பணியில்
ஐயம் ஏதும் இல்லாது
ஒன்றே கடவுள் வழியென
ஓராயிரம் வழியில் உரைத்து
ஔடதமாய் ஆன்ம நோய்க்கு
அவதரித்த குருக்களே வாழ்க

***சில்லையூர் ரமணி***

கடவுளே தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும்.

## மாசில்லாக் குருவே

மாசில்லாக் குருவே
ஆழமான பணியில்
அரும்பணியாற்றும் அருட்பணியோர்க்கு
ஆயிரம் நன்றி
மாமரி மைந்தனின்
மாசில்லாப் பணியை
மனமகிழ்வோடு
குறைவறச் செய்யும்
குரு இவர்க்கென்றும் - எம்
குவலயம் சேரும்
அன்பின் உருவாய்
ஆற்றிடும் பணியால்
அருட்திரு ஆவியை பெற்றிடுவீரே
எளியோர்க்கு
ஏணியாய் உழைத்திடும் - நீரே
ஏதிலி வாழ்வில்
ஏரி திரி மெழுகே
பாவிகள் பாவத்தை
பரமனண்டை சேர்த்திடும் - உமது
பாதத்தைக் கழுவ
பரிமள நீரால்
பணிந்திடுவோமே!
மைந்தனின் பணியை
மகிழ்வுறச் செய்யும்
சிந்தை நிறை சேவகன் நீயே
மந்தைகள் எம்மை
மாண்புடன் மேய்த்து
மன மகிழ்வீரே
மாசில்லாக் குருவே!

**கில்டா ஜெயதீசர்**
**- யாழ்ப்பாணம்**

## குருக்களே நீங்கள் பேறு பெற்றவர்கள்

மூவொரு இறைவனின்
திராட்சைத் தோட்டமதில்
இறைபணி புரியும்
ஆண்டவன் குருக்களே
நீங்கள் பேறு பெற்றவர்கள்.

உணவோடு கரையும்
காரமுள்ள உப்பைப்போல்
மக்களின் வாழ்வுக்காய்
கரைந்து அழிகின்றீர்கள்
நீங்கள் பேறு பெற்றவர்கள்.

திருமறையை வளர்ப்பதற்கு
அனைத்தையும் துறந்து
புளிக்காரம் போலிருந்து
பணிகளைச் செய்கின்றீர்கள்
நீங்கள் பேறு பெற்றவர்கள்.

இறைபணியில் இமயமாய்
பிறர்பணியில் சிகரமாய்
கத்தோலிக்கத் திருமறையில்
இன்னுமொரு கிறிஸ்துவாய்
நீங்கள் பேறு பெற்றவர்கள்.

**இ. அ. அமலரட்ணம்**
**- யாழ்ப்பாணம்**

உறுதிதரும் புதுப்பிக்கும் ஆவியை என்னுள்ளே உருவாக்கியருளும்.

# அழைத்தவர் அருகில் வாழ்வது சுகமே

தேவ அழைத்தலுக்காக செபிப்பதற்கு அதற்காக உழைக்கவேண்டிய பொறுப்பை உணர்த்துவதற்காகத் தரப்பட்ட விஷேட தினமே தேவ அழைத்தல் தினம். இதை பாஸ்கா காலம் 4ம் ஞாயிறு நினைவு கூருகிறோம். இத்தினத்தை முன்னிட்டு உங்களோடு ஒரு சில சிந்தனையும் அழைப்பையும் விடுக்கிறேன்.

நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழி மரபினர். அரச குருக்களின் கூட்டத்தினர். தூய மக்கள் இனத்தினர். அவரின் உரிமைச் சொத்தான மக்கள். எனவே உங்களை இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மை மிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி *(1 பேதுரு 2:9)*

திருமுழுக்கு வழியாக உரிமை வாழ்வுக்கு அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் கிறிஸ்து இயேசுவின் அரச, குருத்துவ, ஆசிரிய பணியில் பங்குகொள்ள அழைக்கப்பட்டவராகிறார்.

இவ்வாறு பொதுக் குருத்துவத்தில் பங்கு பற்றி கிறிஸ்துவின் பணியில் ஈடுபட்டு உழைப்பது எமது முதன்மைப் பணியாக ஏற்கவேண்டும். எல்லோரும் இவ்விதமான பணியைச் செய்ய அழைப்பு பெற்றிருந்தாலும் இறைவன் தாம் விரும்பியவர்களை குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட மக்களுக்கு பணி செய்ய அழைத்து அவர்களைத் தகுதியானவர்களாக ஆக்குகின்றார். "என் பின்னே வா" என்று கிறிஸ்து இயேசுவின் தொடர்ச்சியான அழைப்பின் குரல் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

"அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு –" என்ற எமது ஆண்டவர் இயேசுவின் குரல் இன்று நாம் வாழும் சூழலில் கேட்டுக்கொண்டே இருக்கிறது. இவ் அழைப்பின் குரல் அன்பான தம்பிகளே, தங்கையர்களே உங்களுக்குக் கேட்கிறதா? ஒருவேளை சிறுவர்களாக இருக்கின்றபோது பாடசாலை செல்கின்ற நாட்களிலே அல்லது உமது வாழ்வின் தெரிவுகளை செய்கின்றபோது பலர் மூலமாக உங்களுக்கு இவ் அழைப்புக் கிடைத்திருக்கலாம். உங்கள் பெற்றோர், ஆசிரியர்கள், பங்குத் தந்தையர்கள் துறவறத்தினர் மூலமாக அல்லது உங்கள் செபத்தில் இவ் அழைப்புக்கான தூண்டுதல்கள் கிடைத்திருக்கலாம். இறைவன் பலர் மூலமாக, சம்பவங்கள் மூலமாக இந்த அழைப்பைத் தந்திருக்கலாம். உதாசீனம் செய்து விடாதீர்கள்.

உங்களது பெற்றோருடனோ பங்குத் தந்தையர்களுடனோ நீங்கள் நட்புடன் பழகும் அருட்சகோதரிகளுடனோ ஆண்டவர் தருகின்ற செவிப்படுத்தல்களை அறிவியுங்கள். ஆழமான செபத்தில் ஈடுபட்டு இறையருளைக் கேளுங்கள். அதை உறுதி செய்யுங்கள்.

அதுமட்டுமல்ல உங்களிடமுள்ள ஆற்றல்கள், திறமைகள் எவ்விதமாக குருத்துவ துறவற வாழ்வுப் பணியை மேற்கொள்வதற்கு உகந்தது என்று உய்த்துணர்ந்து கொள்ளுங்கள்.

எமது மறை மாவட்டத்தில் மறை மாவட்டக் குருவாக வருவதென்றாலோ அல்லது பல

துறவற சபைகளில் இணைந்து உருவாக்கப் பெறுவதென்றாலோ இவ் உய்த்துணரும் காலத்தில் உங்களது தொடர்புகளை ஏற்படுத்தி உரையாடி நல்ல முடிவை எடுத்துக்கொள்ளுங்கள்.

அன்பான பெற்றோர்களே! வருங்கால திருச்சபை நீங்கள் வளர்த்தெடுக்கும் பிள்ளைகளிலே தங்கியுள்ளது. அவர்களுக்கு சிறந்த கிறிஸ்தவ கல்வியைக் கொடுங்கள். கிறிஸ்தவ ஒழுக்க நெறிகளில் வளர்த்தெடுக்க முழு முயற்சி செய்யுங்கள். உங்களது பிள்ளைகளுக்கு இறைபணி செய்வதற்கான தூண்டுதல்கள் ஆசைகள் ஏற்படுமென்றால் ஊக்கம் கொடுங்கள்.

நல்ல முடிவுகளை மேற்கொள்ள உங்களால் இயன்ற உதவிகளைச் செய்யுங்கள். திருத்தந்தை 10ம் பத்திநாதர் ஒருமுறை தம் தாயிடம் அம்மா! நான் அணிந்திருக்கின்ற இந்த மோதிரம் உலகில் உள்ள எல்லா மோதிரத்தைக் காட்டிலும் மிகச் சிறந்தது என்றார். அப்போது அவரது தாயார் மகனே! நீர் அணிந்திருக்கின்ற எனது மோதிரம் மிகச் சிறந்தது. ஏனென்றால் நான் இந்த மோதிரத்தை அணியவில்லை என்றால் நீ பிறந்திருக்க முடியாது என்றாராம். உண்மைதான் நல்ல குடும்பத்தில் இருந்துதான் நல்ல முத்துக்கள் உருவாகும். எனவே நல்ல கிறிஸ்தவ விசுவாசப் பெற்றோராக குடும்பமாக வாழ்ந்து இறையழைத்தலை ஊக்குவியங்கள். அனைத்திலும் மேலாக செபத்தில் நிலைத்திருங்கள்.

மதிப்புக்குரிய குருக்களே, துறவியரே ஏற்கெனவே கிறிஸ்துவின் அழைப்புக்கு பதில் அளித்துள்ள குருக்களும், துறவியரும் தமது சொந்த சாட்சிய வாழ்வின் மூலம் பலரும் தங்களின் இறையழைப்புக்கு தாராளமாகப் பதில் சொல்ல தூண்டுதலாக இருக்கமுடியும் என நமது திருத்தந்தை இவ் ஆண்டின் “இறை அழைத்தல் தின” செய்தியின் சாரமாகத் தருகிறார். எனவே எமது சாட்சிய வாழ்வால் இறை அழைத்தலை எமது மறை மாவட்டத்தில் ஊக்குவித்து ஆண்டவர் இயேசுவின் இறையரசின் கனவை நனவாக்குவோம்..

**அருட்பணி எமில் போல்**
**இறை அழைத்தல் இயக்குனர் – யாழ் மாவட்டம்**

# அர்த்தமுள்ள பணிக்காக அழைப்பு

*இறை அழைத்தல் பற்றி ஆழமாகச் சிந்தித்துச் செயல்பட திருச்சபை இன்று நம்மை அழைக்கிறது.*

*சமூகப் பணியின் பயன்கள்:*

சமூக நலனுக்காக வாழ்வது உன் வாழ்வை அர்த்தமுள்ளதாக்கும் என்பது உளவயலாளர் விக்ரர் பிராங்கிளின் கருத்து. சமூகநலனை மேம்படுத்த உழைப்பவர்களே உளநலனிலும் மேம்படுவர் என்பது உளவயலாளரான அல்பிரட் ஆல்டரின் கருத்து. உளவியலாளரே இவ்வாறு கூறுகின்றரெனில் இயேசு விரும்பும் சமூகத்தை உருவாக்கப் பங்களிப்புச் செய்வது உயர்வான முறையில் நம் வாழ்வை அர்த்முள்ளதாக்குவதோடு சிறந்த உளநலம் நிறைந்தவர்களாக வாழவும் வைக்கலாமென்று ஊகிக்கலாமல்லவோ?

*அர்த்தம் நிறைந்த இறைப்பணி:*

இயேசுவின் பணியைத் தொடர்வதற்கு எவராவது முன் வருவதையிட்டு பலர் உண்மையான மகிழ்ச்சி அடைவதனை குருக்கள் திருநிலைப் படுத்தும்போது அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அவ்வாறே இருபத்தேழு வருட யுத்த அனுபவங்களின்போது குருக்கள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி வாழ்வதைக் கண்டும், குருக்கள் கொலை செய்யப்படுவதை, மரணிப்பதை அல்லது காணாமற் போவதைக் கண்டும் பல இளைஞர்கள் இயேசுவின் பணியை ஆற்றுவதற்கு இன்னமும் முன்வருவதும், குருக்களுக்காகவும், குருமட மாணவர்களுக்காகவும் நம் கத்தோலிக்கள் தவறாது செபித்து வருவதும், குருத்துவ அழைத்தல் அர்த்தம் நிறைந்த ஒன்று என்பதையே சுட்டிக்காட்டி நிற்கின்றது.

*அழைத்தலை ஏற்பதற்கான தேவைகள்:*

யுத்தத்தால் துன்புறும் நம் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் நற்செய்தியை அளித்து அவர்கள் தம் வாழ்வை உற்சாகத்தோடு மீளக் கட்டி எழுப்ப உறுதுணையாக நிற்பதற்கு இன்னும் பல குருக்கள் தேவை. பெற்றோரை இழந்து வாழும் பிள்ளைகள் துணையான (கணவன், அல்லது மனைவி) இழந்து தவிப்போர், அங்கங்களை இழந்தோர், உளக்காயமுற்றோர், பிறரால் கைவிடப்பட்ட முதியோர், புலம் பெயர்ந்தோர் எனப் பல்வேறுபட்ட மக்களுக்கு பணியாற்ற இன்னும் இயேசு பலரை அழைக்கிறார். "அறுவடையோ மிகுதி. வேலையாட்களோ குறைவு" என்ற அழைப்பு இன்றும் உண்மை. பணிகள் பலவுண்டு பணியாற்றக் குருக்கள் போதாது என்பதுதான் இன்றைய யதார்த்த உண்மை.

*அழைத்தலை உருவாக்கும் காரணிகள்:*

குருக்கள் உருவாகிய குடும்பத்தின் உறவினரிடையே சிலர் இறை அழைத்தலை மனம் உவந்து ஏற்பதையும், உறவினர் இல்லாதுவிடின் குருக்கள் உருவாகிய கிராமத்தைச் சேர்ந்த

*நீர் தேர்ந்தெடுத்து உம்மருகில் வைத்துக் கொள்ளும் மனிதர் பேறுபெற்றோர்.*

இளைஞர்கள் குருத்தவத்தை விரும்பி ஏற்பது கண்கூடு. சில சந்தர்ப்பங்களில் குருக்களே சிறுவர்களில், இளைஞர்களில் குருத்துவத்திற்கு வேண்டிய ஆளுமைப் பண்புகள், ஆன்மீகப் போக்குகளை அடையாளம் கண்டு குருவாக வருமாறு நேரிடையாகக் கேட்பதும், சிலரை விரும்பி ஏற்க வைப்பதும் உண்மை. அவ்வாறே குருக்களின் பணியைப் பாராட்டி அன்பும் ஆதரவும் அளிக்கின்ற கிராமங்களிலிருந்தும் குருக்கள் உருவாகின்றனர். மாறாக குருக்களை ஈட்டிகளால் குத்துன்றவர்கள் நிறைந்த கிராமங்களிலிருந்து மிக அருமையாகச் சிலரே குருக்களாக உருவாவதும் வெளிப்படையான உண்மை. எனவே குருக்களுக்கு வழங்கும் ஆதரவும் குருத்துவத்தை நாட வைப்பதில் பங்களிப்புச் செய்கின்றது. அவ்வாறே குருக்களின் மறையுரை, ஆழமான ஆன்மீகம், எடுத்துக்காட்டான வாழ்வு, அழைத்தல் வாழ்வுக்கு பெரும் ஊக்கிகளாகின்றன. பெற்றோரின் உண்மையான ஆன்மீக வாழ்வு தம் பிள்ளைகளை ஆன்மீக வாழ்வில் பொருத்தமாக நெறிப்படுத்துதல் என்பனவும் குருத்துவத்தைப் பல பிள்ளைகள் நாட உதவி உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

அழைத்தலை நெறிப்படுத்தல்:

இறைவன் அழைத்தாலும் அது ஞானத்தோடு அடையாளம் காணப்பட்டு வளர்க்கப்பட வேண்டும் என்ற உண்மை, சாமுவேலை இறைவன் அழைத்தபோது இறைவாக்கினால் ஒலி நெறிப்படுத்திய விதம் எடுத்துக் காட்டுகின்றது. குரு மடப் பயிற்சி போன்றே சொந்தக் குடும்பமும் ஆற்றல் மிக்க குருத்துவப் பயிற்சிக் கல்லூரிதான்.. இறைவன் அழைக்கும்போது அதற்கு ஊக்கம் கொடுத்து வளர்ப்பது பெற்றோர், கத்தோலிக்கர் அனைவரதும் கடமையாக உள்ளது. அதாவது அவர்களை குருமடத்துக்கு அனுப்புவதில் மாத்திரமல்ல அவர்கள் விடுமுறைக்கு மக்கள் மத்தியில் பணியாற்றும்போது அவர்கள் தம் அழைத்தலுக்கு ஏற்ப ஊருவாக்குவதற்கும் ஊக்கம் கொடுப்பதும் இறை அழைத்தலுக்குப் பொருந்தா நடத்தைகளில் அறியாமையால் ஈடுபடும்போது பொருத்தமான பாதையில் நெறிப்படுத்துவதும் இறை அழைத்தல் பெருகுவதற்குச் செய்யும் உன்னதமான சேவை என்பதை அனைவரும் உணர்ந்து செயற்பட அழைக்கப்படுகின்றனர்.

அழைக்கப்பட்டோருடன் தொடர்பாலோரின் பொறுப்பு:

நாம் குறிப்பிட்ட குருவின் குடும்பத்தவர், உறவினரென மகிழ்ச்சிப் பெருமிதமடைவது இயல்பானது. ஆனால் அவரை என் குடும்பத்தவர், உறவினர் என்று கூறிப் பெருமை கொள்ளும் அளவிற்கு நமது வாழ்க்கை அமைகின்றதா எனச் சிந்தித்துப் பொருத்தமான முறையில் தம் வாழ்வை அமைத்துக்கொள்ள முயற்சிப்பதும் முக்கிய பொறுப்பாகும்.

*நிலையான கனி கொடுப்பதே குருக்களின் பணி (யோவான் 15:16)*

**அருள்திரு. இராசேந்திரம் ஸ்ரலின்**

# முழு மனித விடுதலைக்காக சித்தத்தை வாழ்வாக்குவதே அழைத்தல் வாழ்வு.

இறையெண்ணம் குறைந்து வரும் சமுதாயத்தில் இறையழைத்தல் என்பது என்ன என்று சிந்திக்கின்ற போது இறையழைத்தல் தனியொரு மனிதனுக்கும், சமுதாயத்துக்கும் இறைவன் கொடுக்கும் அரிய கொடை எனலாம். அரிய கொடை என்று சொல்லும்போது ஆயிரம் சவால்களும், தியாகங்களும் அதிலே அடங்கி இருப்பது வெளிப்படை உண்மை. கடவுள் தாம் படைத்த அனைவரையும் பாதுகாத்துப், பராமரித்துப் பணிசெய்து வருகிறார். அந்தப் பணியை தம்மோடு இணைந்து செயலாற்ற மனிதர்களை அழைக்கிறார். பொதுப்பணிக்கோ இறைப்பணிக்கோ ஒருவர் அழைக்கப்பட்டாலும் அந்த அழைப்பு இறைவனிடமிருந்தே வருகின்றது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இன்று சிந்தனையை வியக்க வைக்கும் அளவிற்கு வித்தை காட்டும் விஞ்ஞானமும், நாகரீகமும் தலைதூக்கியுள்ள உலகில் இறைவனை மறந்து மாற்று இன்பங்களையும் நிலையில்லா சுகபோகங்களையும் தேடிச்செல்லும் மனிதர்களையே நாம் காண முடிகிறது. அழைப்புப் பெற்றவர்கள்கூட இதற்கு விதி விலக்கு இல்லை.

அழைத்தல் வாழ்வு என்பது இறைவனின் விருப்பத்தைத் தேர்ந்து தெளிந்து அதனைச் செயலாக்குவதில் தன்னை அர்ப்பணிப்பதாகும். வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் தன்னை வழி நடத்தும் இறைவனுக்கு ஒருவர் கொடுக்கும் பதில் மொழியாகும். இயேசுவின் உளப்பாங்கைத் தமதாக்கி அவரது மனநிலையில் சிந்தித்து செயல்படுவதுதான் கிறிஸ்தவ வாழ்வு. இயேசுவின் வழியில் காலத்தின் தேவையை அறிந்து முழுமனித விடுதலைக்காக இறையாட்சிச் சமூக உருவாக்கப் பயணத்தில் எம்மை அர்ப்பணிப்பதே உண்மையான அழைத்தல் வாழ்வாகும். அதாவது இறைப் பற்றுதலோடு மறைப்பற்றுதலும், இறையன்போடு பிறரன்பும், ஆழ்ந்த விசுவாசத்தோடு அரிய பெரிய குணங்களையும், ஆன்மீக வளர்ச்சியோடு ஆளுமை வளர்ச்சியையும், தியாக உணர்ச்சியோடு செயல் திறனையும் கொண்டமைந்த வாழ்வே அழைத்தல் வாழ்வு.

இறைவன் தாம் விரும்பியதை தாம் விரும்பியவர்கள் மூலமாக நிறைவேற்றுபவர். அழைக்கப்படுபவர்கள் சாதாரண மனிதர்களாக இருந்தாலும் அவர்களைத் தேர்ந்தெடுத்து சக்தியுள்ளவர்களாக உருவாக்கி தனது சித்தத்தை அவர் உலகில் நிறைவேற்றுவதை திருவிவிலியமும், திருச்சபை பாரம்பரியங்களும் எமக்குக் காடடி நிற்கின்றன. எரேமியா இறைவாக்கினர் தாயின் வயிற்றினின்றே தேவ ஊழியத்திற்கு அழைக்கப்பட்டது போல, (எரேமியா 1:5) திருமுழுக்கு யோவான் அன்னையின் உதிரத்தில் வைத்தே அர்ச்சிக்கப்பட்டு இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டது, போல புனித பவுல் தாயின் கர்ப்பத்திலே தேர்ந்தெடுக்கப்பட்டது போல, (கலா 1:15) அற்புதமான அழைத்தல்கள் எங்கள் ஒவ்வொருவருக்கும் காத்திருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இறையழைத்தலின் விளைநிலம் குடும்பங்களே. குடும்பத்திலே பெற்றோர் தங்களின் பிள்ளைகளை கிறிஸ்தவ மதிப்பீடுகளுக்கமைய வளர்ப்பதில் அக்கறை காட்டவேண்டும். ஏனெனில் "ஆண்டவரே பேசும் அடியேன் கேட்கின்றேன் (சாமு 3:10) என்று." அன்று சாமுவேல் தான் கேட்ட அழைப்புக்கு பணிந்தது போல எமது சிறுவர்களும் தங்கள் உள்ளத்தில் உறைந்து பேசுகின்ற இறைவனின் அழைப்புக்கு செவிமடுக்க வேண்டும். அழைப்பு சிறுவர்களுக்கு மட்டுமல்ல எல்லோருக்கும். எந்த நிலையிலும் எந்த இடத்திலும் வரலாம். **புனித சவேரியாரைப் போன்ற பேராசிரியர்கள், புனித அல்போன்சைப் போன்ற வழக்குரைஞர்கள், புனித இஞ்ஞாசியாரைப் போன்ற போர் வீரர்கள், புனித அமிர்தநாதரைப் போன்ற அரசு அதிகாரிகள், புனித அகுஸ்தீனாரைப் போன்ற தத்துவ மேதைகள், புனித சின்னப்பரைப் போன்ற திருமறை நிபுணர்கள், புனித பிலிப்பு நேரியாரைப் போன்ற பொது மனிதர்கள்** இவ்வாறு இறையழைப்பிற்குச் செவிமடுத்து

தாயின் வயிற்றிலிருந்து நீர் என்னைப் பிரித்தெடுத்தீர்.

தங்களை இறை சித்தத்திற்கு அர்ப்பணித்து வாழ்ந்தவர்கள் எல்லோரும் எமக்கு முன்னோடிகளாக விளங்குகின்றனர்.

இன்று உலகியல் எண்ணங்களுடனும், சிந்தனைகளுடனும் வாழும் ஒருவருக்கு பல்வேறு சவால்கள் அகத்திலும், புறத்திலும் எழுகின்றன. அவை இறைவனுடனான உடனிருப்புக்கும், தியாக அன்புக்கும், சுய கையளிப்புக்கும் தடைக்கற்களாக அமைகின்றன. அழைப்புப் பெற்றவர் தன்னை எந்த நேரத்திலும், எந்த நிலையிலும், எந்த இடத்திலும் இறைவனுடைய மகிமைக்காகவும், திருச்சபையின் நன்மைக்காகவும், ஏழை மக்களின் நல்வாழ்வுக்காகவும் கையளிக்கத் தயாராக இருக்கவேண்டும். அதுதான் அர்ப்பண வாழ்வாகும். புனித பவுல் பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடும் இயேசு ஆண்டவரின் வெறுமையாக்கலை (பிலி 2:6-8) நாம் எம் வாழ்வில் கொண்டு முழுமனித விடுதலைக்காக இறை சித்தத்தை வாழ்வாக்குவதுதான் உண்மையான அழைத்தல் வாழ்வாகும். அழைக்கும் ஆண்டவர் பணிக்கும் சவாலைச் சந்திக்கப் புறப்படுவோம். நாம் தொடர வேண்டிய பாதமும், பாட வேண்டிய வேதமும் இயேசு ஆண்டவர்தான் என்று உறுதி கொள்வோம். பாதியிலே முடிந்து போகின்ற நேசத்திற்காக அல்ல. பாத்தி கட்ட முடியாத பரமனின் பாசத்திற்காக வாழ முடிவெடுப்போம். முழுமனித விடுதலைக்காக இறை சித்தத்தை வாழ்வாக்கப் புறப்படுவோம்.

**அருட் சகோ. றமேஸ் அ.ம.தி.**

# குருத்துவமே நீ என்றும் மகத்துவமே

ஓ குருத்துவமே நீ என்றும் மகத்துவமே – உன்னில்
வாழும் குருக்களின் வாழ்வே ஒரு தனித்துவமே

கண்ணெதிரே கடவுளைக் கண்டேன் என்றால்
மறுக்கின்ற உலகம் இது
கண்ணாலே பேயைக் கண்டேன் என்றால்
மயங்கி வீழ்கின்ற உலகம் இது
கண்ணியமாய் உம் பணிதனை ஆற்றிடுவீர்
கன்னமிட விடாதீர் உம் கடமைதனை

முட்களின் மேலே நடந்து பூப்பறிக்கும் காலம் இது
உம் முகத்தில் நல் புன்னகையால் நற்செய்தியை – விதைத்து
உலகம் போற்ற உம் பணிதனை ஆற்றிடுவீர்
மாந்தர் தனை விண்ணக மாட்சிபெற அழைத்திடுவீர்
உம் தனித்துவமதனை தாங்கி நின்று
மகத்தவம்தனைக் காண உம் குருத்தவத்தை
இனிதே வாழ்ந்திடுவீர் – எம் இனிய குருக்களே.

***M. M. ஜசிந்தா***

உம்மையே நான் எப்போதும் புகழ்ந்து போற்றுவேன்.

# அருட்பணியாளரே உங்களோடு ஒருகணம்

வாழ்வோடு எம்வாழ்வின் வழியோடு
நடைபோடும் அருட் பணியாளரே
எடையோட உண்டே யாருக்கும் பலம்
விடையோடு வருகின்றேன் விழிப்பாகக் கேளுங்கள்

பிறந்தவுடன் ஒருபாவம் சென்ம பாவம்
யாருக்குண்டு பலம் அப்பாவம் போக்கிட
அருட்பணியாளரே உம்மால் தான் முடியும்
திருமுழுக்கெனும் அருட்சாதனம் கொடுப்பதனால்

திருப்ப தனிலே தினந்தோறும் ஜெபித்து
அப்பத்தை கிறிஸ்தவன் உடலாக இரத்தமாக
நாள்தோறும் மாற்றி கிறிஸ்துவைக் கொடுக்க
அருட்பணியாளரே உம்மால் தான் முடியும்

வாழ்விலே சிறந்தவாழ்வு குடும்ப வாழ்வு
குடும்பத்தில் ஒன்றிணைய மெய் விவாகம்
வையத்தில் நடாத்தி வாழ்வை சிறப்பிக்கும்
அருட் பணியாளரே உம்தாள் பணிகின்றோம்

நோய் நொடியிலும் பல்வேறு கஷ்டத்திலும்
ஆசீர் வதிக்கும் அருட்கரம் கொண்டவரே
அருட்பணியாளரே யாருமை எண்ணின்உண்டோ
இவ் வுலகில் ஏளனம் உரைக்க

நோய்வந்து சாவின் பிடியினில் நாமிருக்க
எம்மருகில்வந்து நோயிற் பூசுதல் தந்து
எம்பாவம் போக்கும் அருட் பணியாளரே
உரமாகச் சொல்வோம்நாம் வாழும்கிறிஸ்து நீர்தானென்று

பிறந்து நாம்வாழ்ந்து இறந்து வான்வீட்டிற்கு
பறந்து செல்லும்வரை பரிசுத்தமாய் இருக்க
எம்கரம் பிடித்து வழிநடத்தும் அருட்பணியாளரே
வணங்கி தாள்பணிந்து அர்ப்பணிக்கின்றேன் கவிதையால்.

**திருமதி. கில்டா மத்தியூஸ், சுன்னாகம்.**

உமது இல்லத்தில் தங்கியிருப்போர் நற்பேறு பெற்றோர்.

# இறைமக்கள் குருத்துவம்

குருத்துவம் என்ற வார்த்தையைக் கேட்டவுடன் பொதுவாக நம் பங்குக் குருக்களைத்தான் நாம் நினைக்கிறோம். பழைய ஏற்பாட்டில் காணப்படும் குருக்களும் பிறசமயங்களில் காணப்படும் குருக்களும் நமக்கு வெளிப்படுத்தும் பார்வை என்னவென்றால், இவர்கள் யாவருமே பலி செலுத்துபவர்கள் மட்டுமே. குருக்கள் தமக்குரிய திருப்பணியைச் செய்தனர்." என்று குறிப்பீடு நூலில் காண்கிறோம். (2குறி 7:6) அதே போன்று செகரியா என்ற குரு கோயில் திருப்பணியைச் செய்தார். அதாவது செகரியா கடவுளின் திருமுன் குருத்துவப் பணி (தூபம் காட்டுவது) ஆற்றி வந்தார் என்று லூக்கா நற்செய்தியாளரும் குறிப்பிடுகின்றனர். (1:8) எனவே பொதுவாக குரு என்ற வார்த்தையை விவிலியத்தில் காணும்போது பலி செலுத்துபவரைத்தான் நினைத்துப் பார்க்க முடிகிறது. இப்படிப்பட்ட நிலையில் குருத்துவ அருள் அடையாளம் பெற்ற குருக்களின் வாழ்வும், பணியும் கடவுளுக்குரியதாக நிலைபெற வேண்டும் என்பதற்காகத்தான் குருக்கள் ஆண்டு என்று இத் தருணத்தில் நாம் கொண்டாடுகின்றோம். இச்சூழலில் இறை மக்களுக்கும் குருக்களுக்கும் தொடர்பு உண்டா? கத்தோலிக்கக் குருக்கள் வெறும் பலி செலுத்தும் பணியாளர்கள் மட்டும்தானா? போன்ற கேள்விகள் எழுகின்றன. இதற்கான தேடலை இனிக்காண்போம்.

### குருக்களும் இறைமக்களும்

குருக்கள் தங்கள் குருத்துவ அருள் அடையாளத்தின் காரணத்தால் அருள் அடையாளப் பணி ஆற்ற கடமைப்பட்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் குருக்கள் என்று சிறப்பாக அழைக்கப்படுகிறார்கள். இந்த குருக்களைப் பேணுவதிலும் அவர்களுக்காகச் செபிப்பதிலும் இறை மக்கள் ஊக்குவிக்கப் படுகிறார்கள். அதனால்தான் இந்த குருக்கள் ஆண்டு தருணத்தில் குருக்களுக்காக செபிப்போம் என்று அழைக்கப்படுகிறார்கள். இந்த குருக்கள் ஆண்டில் குருக்களுக்காக செபிப்பது மட்டும்தான் இறை மக்களின் கடமை என்று கருதக்கூடாது. தங்களுக்கும் குருத்துவப் பணி உன்டு என்பதையும் இத் தருணத்தில் சிந்திக்க வேண்டும். குருக்களும் தாங்கள் ஏதோ மிக மேலான இடத்தில் இருப்பதாகவும் இறை மக்கள் எல்லாம் தங்களுக்குக் கீழ் இருப்பவர்களாகவும் கருதி வேறுபடுத்திப் பார்க்கின்ற மன நிலையைத் தவிர்க்க வேண்டும். குருக்களும், இறைமக்களும் இணைந்ததுதான் திருச்சபை. இத்திருச்சபையின் வாழ்வும்பணியும்இறைவனுக்குமாட்சிமையையும்புகழ்ச்சியையும்அளிக்கவேண்டும். இத்தகைய தெளிவைக் குருக்களும் இறைமக்களும் அடைய வேண்டுமென்றால் ஒவ்வொருவருக்குரிய அழைத்தலின் தன்மை என்ன என்பதை நாம் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

### குருத்துவ அரசர்கள்

யூத சமுதாயத்தில் இறைவாக்கு உரைப்பவரையும், சட்டத்தை தெளிவு படுத்துபவரையும் குருக்களாகக் கருதும் வழக்கம் இருந்தது. (காண்க நீதி 17:5:18:5:1 சாமு 14:36-42). ஆனால் யூத முறைமைப்படி பலி செலுத்துபவர்தான் குரு என்று பொதுவாக கருதப்பட்டார். இந்த வழக்கம் இந்துசமயம், சமணமதம், புத்தமதம் போன்ற சமயங்களிலும் இருக்கிறது. இருப்பினும் விவிலிய வெளிப்பாடு நமக்கு குருத்துவத்தின் மற்றுமொரு பரிமாணத்தை தெரிவிக்கின்றது. அதுதான் இறைமக்கள் குருத்துவம்.

இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து விடுதலை அடைந்து செங்கடலைக் கடந்தார்கள். அதன் பின்னர் சீனாய் பாலைநிலம் வழியாகப் பயணம் செய்து சீனாய் மலை அருகில் பாளையம் இறங்கினர். மக்களை அங்கேயே விட்டுவிட்டு மோசே கடவுளின் மலையான ஒரேபுக்கு ஏறிச்சென்றார். ஆங்கே கடவுள் இஸ்ராயேல் மக்களுக்கு அறிவிக்க வேண்டிய செய்தியை மோசேயிடம் தெரிவித்தார். அது பின் வருமாறு: "நீங்கள் என் வார்த்தைக்குச் செவிசாய்த்து என் உடன்படிக்கையைக் கடைப்பிடித்தால் அனைத்துலகும் என் உடமையேயெனில் நீங்களே எல்லா மக்கள் இனங்களிலும் என் தனிச் சொத்தாவீர்கள். மேலும் எனக்கு நீங்கள் குருத்துவ அரசாகவும், தூய மக்கள் இனமாகவும் இருப்பீர்கள். இவ் வார்த்தைகளே நீ இஸ்ராயேல் மக்களிடம் கூற வேண்டியவை" என்றார். (வி.ப. 19:5)

**தூய குருக்கள்**

கிறிஸ்தவ அழைப்பும் பொறுப்பும் பற்றி புனிதபேதுரு தனது முதல் மடலில் எழுதுகிறார். இதில் "இயேசு கிறிஸ்துவின் வழியாக கடவுளின் உகந்த ஆவிக்குரிய பலிகளைப் படைக்கும் தூய குருக்களின் கூட்டமாக இருப்பீர்கள்" என்று இறை மக்களைக் குறித்து எழுதுகிறார். (1 பேதுரு 2:5) இக்கருத்தை மேலும் வலியுறுத்தும் வண்ணம் விடுதலைப் பயண நூலில் கடவுளின் வெளிப்பாட்டை பின்னணியாகக் கொண்டு " நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழி மரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர், அவரின் உரிமைச் சொத்தான மக்கள்" என்று பேதுரு குறிப்பிடுகிறார். (1 பேது 2) அதாவது பிற மக்களிடையே கிறிஸ்தவ மக்கள் யாவரும் தங்கள் நன்னடத்தையினால் கடவுளுக்கு உகந்தவர்களாக வாழவேண்டும் என்றும் அந்தக் கடவுள் என்ற அரசருக்கு உகந்த வழிபாடு செலுத்தும் குருக்களாக இருக்கவேண்டும் என்றும் பேதுரு மீண்டும் வலியுறுத்துகிறார். காய், கனிகளையும், ஆடு, மாடுகளையும் பலியாக ஒப்புக் கொடுப்பதை விடுத்து தங்களது வாழ்க்கையையே கடவுளுக்கு உகந்த பலியாக அதாவது ஆன்மீகப் பலியாக ஒப்புக் கொடுப்பதை பேதுரு இங்கே வலியுறுத்துகிறார். இதையே புனித பவுலும் பல கடிதங்களில் வலியுறுத்துவதை நாம் காண்கிறோம். (காண் உரோ 12:1-2, 1 கொரி 6:19-20, எபே 2:10 தீத்து 2:11-14)

**முடிவாக**

திருமுழுக்குப் பெற்ற கடவுளின் பிள்ளையாகவும் கிறிஸ்துவின் சீடராகவும் மாறுகின்ற ஒவ்வொருவரும் குருக்களே. இவர்கள் கடவுள் என்ற அரசருக்கு வழிபாடு செலுத்தும் குருக்கள். அருட்சாதனங்களை நிறைவேற்றும் பணி குருத்துவத்தை ஏற்றவர்கள் மட்டும்தான் குருக்கள் என்ற எண்ணத்தை விடுத்து, இறைமக்கள் யாவருமே கடவுளுக்கு உகந்த வாழ்க்கையை பலியாகச் செலுத்தும் குருக்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இத்தகைய வாழ்க்கையில் தங்களை மட்டும் மையமாகக் கருதாமல் தங்களோடு இருப்பவர்களையும் கடவுளின் மக்களாக மாற்றும் கடமையும் இவர்களுக்கு உண்டு. அதனால்தான் நற்செய்தி அறிவிக்கும் பணியும் இத்தகைய குருத்துவத்தில் அடங்கியுள்ளது. எனவே குருக்கள் ஆண்டைக் கொண்டாடும் இறை மக்களுக்கும் தங்கள் குருத்துவக் கடமையை ஆற்ற வேண்டும் என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

# இறை அழைத்தலில் அர்ப்பணிப்பு

*1. இறை அழைத்தல் இறைவனின் ஒரு உன்னதமான கொடை. இறைவன் தான் விரும்பியவர்களை தன்னோடு இருக்க ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைக்கின்றார்.*
*"என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தன் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும். "மத்தேயு 16:24 ஆண்டவன் இயேசுவின் வாழ்வின் அரிச்சுவடுகளைப் பின்பற்றி வாழ ஆசைப்படுகின்ற இறை அழைத்தலில் வாழ்கின்றவர்கள், தம்மைத் தாமே முதலில் இழக்கவேண்டும். தமது இதயத்திற்குள்ளே ஆண்டவர் இயேசு வாசம் கொள்ள அனுமதிக்கவேண்டும். தம்மை தனமும் வாட்டி வதைக்கின்ற கஷ்டங்கள், துன்பங்கள், வேதனைகளைக் கண்டு அஞ்சாமல் இறைவனில் நிலைத்து வாழத் தமது சிலுவையை தானே சுமந்து தமது வாழ்வை இறைவனிடம் அர்ப்பணிக்கவேண்டும்.*

*2. "நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தெரிந்துகொண்டேன்". என்ற இறை வார்த்தையின்படி அழைக்கப்பட்ட புனிதர்களின் வாழ்க்கைப் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால் அவர்கள் தங்களின் உடல், பொருள், ஆன்மா, ஆவி அனைத்தையும் ஏன் தங்களின் வாழ்க்கை முழுவதையுமே இறைவனின் கையில் ஒப்படைத்து இறை இயேசுவுக்காக தங்களை அர்ப்பணித்தார்கள். அதனால்தான் புனிதர்கள் என்ற உன்னதமான நிலையை அடைந்தார்கள்.*

எமது நாட்டில் கத்தோலிக்க மதம் பரப்பப்பட்ட காலங்களிலே ஐரோப்பா நாட்டைச் சார்ந்த குருக்களே இங்கு வந்து அர்ப்பணிப்போடு கூடிய அழைத்தல் வாழ்வை வாழ்ந்து தமது உயிரையும் மறைவளர அர்ப்ணித்தார்கள். சொந்த நாட்டையும், உறவுகளையும், நண்பர்களையும், உடமைகளையும் துறந்து கடல் கடந்து வந்து எமது நாட்டில் பணிபுரிந்து ஆண்டவர் இயேசுவுக்கு சாட்சியாக வாழ்ந்தார்கள். தங்களை வாட்டிய பசியிலும், பட்டினியிலும், நோயிலும், நொடியிலும் எல்லாவற்றிலும் மக்களோடு தங்களை அர்ப்பணித்து வாழ்ந்தார்கள். இங்கேயே மறை சாட்சிகளாக மடிந்தார்கள். மறை வளர தங்களது உடலை உரமாக்கினாாகள். அவர்கள் இறை அழைத்தலில் காட்டிய அர்ப்பணிப்பும் சாட்சிய வாழ்வுமே எமது நாட்டில் கத்தோலிக்க மதம் பெரும் விருட்சமாகி நிற்கக் காரணம் என்று சொன்னால் மறுக்க முடியாது.

"என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி உங்களைப்பற்றி இல்லாதவை பொல்லாதவைகளையெல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறு பெற்றவர்கள்." மத்தேயு 5:11

இறை அழைத்தலில் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்த அன்னை திரேசாவின் வாழ்க்கை கொல்கொத்தா நகரத்தின் ஏழைகளுக்கு விடிவெள்ளியாய் அமைந்தது. அன்னை தன்னுடைய அர்ப்பண வாழ்விலே சந்தித்த சவால்கள் எண்ணற்றவை. பலரின் சொற்களினாலே எதிர்மறையான செயல்களினாலே துன்புறுத்தப்பட்டார். இகழ்ந்து பேசப்பட்டார். ஆனால் அன்னையவள் சோர்ந்துவிடவில்லை. அர்ப்பண வாழ்வில் சவால்களை எதிர்கொண்டாள். அவற்றை மேற்கொண்டாள். இன்று இறை அழைத்தலில் அர்ப்பண வாழ்வுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக எல்லார் இதயங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

தீங்கு உமக்கு நேரிடாது. வாதை உன் கூடாரத்தை நெருங்காது.

"கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்க்கும் எவரும் இறையாட்சிக்குட்பட தகுதியுள்ளவர் அல்ல" லூக்கா 9:62 இன்று உலகம் நவீன மயமாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு குட்டிக் கிராமமாக சுருங்கிவிட்டது. இந்த நவீன உலகத்தில் இறை அழைத்தல் பல்வேறுவிதமான சவால்களை எதிர்கொண்டு வருகின்றது. இறை அழைத்தலுக்குள்ளே வாழ்ந்து பயணித்துக் கொண்டிருப்பவர்களின் கவனமும் நவீன உலக மாயைகளுக்குள்ளே செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இறை அழைத்தலில் அர்ப்பண வாழ்வுக்கு நவீன உலகம் விட்டுக் கொண்டிருக்கிற சவாலை முறியடித்து அழைத்தல் வாழ்வில் தெளிவு உள்ளவர்களாய் வாழ உலக ஆசைகளுக்கே எமது பார்வை செலுத்தப்படாமல் இருக்க இறை அழைத்தல் பெருக இறைவனிடம் இடைவிடாமல் செபம் செய்வோம். செபத்தால் அன்னை மரி தந்த செபமாலை பக்தியினால் உலகை வெல்வோம். மறை சாட்சிகளாய் மடிவோம்.

**அ. நிறோஜித்**
**புனித மாட்டினார் குருமடம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

---

# தரணியில் தடம் பதித்த குருக்கள்

கருவறையில் உதித்து
காலம் செய்த தவப்பயனால்
தரணியில் தடம் பதித்தீர்கள்
இறைபணி நான் செய்வேன் – என
இறங்கினீர்கள் திருச்சபைக்குள்.

இன்பங்கள் அனைத்தும் துறந்து
இணைந்தீர்கள் குருத்துவக் குடும்பத்தில்

குறைகள் தொடர்ந்து வந்தாலும்
தொடர்வோம் எங்கள் பணி என்றீர்கள்.

கோடி துன்பங்கள் வந்தாலும்
என்ன துயரம் நேர்ந்தாலும்
செய்வேன் அனைத்தும்
நற்செய்திக்காக – என
இறைவனுக்குள் இடம் பிடித்தீர்கள்..
தொலை தூரம் கடந்தாலும் – நம்
கால்கள் சோராது என்பீர்கள்
நற்செய்தி தனை பறைசாற்றினாலும்
நம் நாவு வறளாது என்பீர்கள்.

சவால்கள் பல எழுந்தாலும்
தொடர்ந்து செல்வோம் நாம்
துணிந்து போதிப்போம் நற்செய்தி – என
நடை போடுவீர்கள் நீங்கள்.

வாழ்க! உங்கள்பணி என்றும்
வளர்க நின்சேவை தரணியில்
உங்கள் குருத்துவம் வளமாக
வேண்டுவோம் நாம் நற்செபத்தில்.

**லி. லின்ரா சாந்தினி, சாவகச்சேரிப்பங்கு**

**நன்றி: பாதுகாவலன்**

நீர் செல்லுமிடமெல்லாம் உம்மைக் காக்கும்படி தம் தூதர்க்கு அவர் கட்டளையிடுவார்.

# திராட்சையூரின்
# முதல் அருட்செல்வி ஆன் மேரி



இறைவனின் திருமறைக்காக
திராட்சையூரின் முதல் துறவியாகி
செம்மண்ணுக்கு பெருமைகள் சேர்த்த
திருச்சிலுவை கன்னிகையே

ஆத்தும பணியோடு மருத்துவப் பணியும்
பல ஆண்டுகளாய் பணிவாய் செய்து
மண்ணுலகப் பணிமுடித்து
விண்ணுலகம் சென்றீரே

ஈழத்தில் ஓர் அன்னை தெரசாவாக
அமைதியாய் அரும்பணிகளாற்றி
நித்திய வாழ்வுக்குள் நிரந்தரமாய்
கர்த்தருக்குள்ளே கலந்து விட்டீர்
வாழ்க நின் புகழ்.


திரு. திருமதி எட்விஸ் றூபி ஜேம்ஸ்

*நீடிய ஆயுளால் அவர்களுக்கு நிறைவளிப்பேன்.*


# விசுவாசத்தின் விளைநிலத்தின் முத்துக்கள்

''தாம் முன்குறித்து வைத்தோரை அவர் அழைத்திருக்கிறார்; தாம் அழைத்தோரை தமக்கு ஏற்புடையோராக்கி இருக்கிறார்'' (உரோ.8:30)

தேனூறும் திராட்சை கனிந்து பொலிந்திட, உயர்தரு வெற்றிலை சாமரம் வீசிட ஊர்வலம் வருகின்ற எம் பங்கின் பாதுகாவலர் புனித யாகப்பரின் திருவடியில் அவரின் அருளாலும் எம் மூதாதையரின் விசுவாச வாழ்வின் உறுதிப்பாட்டின் நற்பலனாகவும் எம் பங்கில் அருட்பணியாற்றிய அருட்பணியாளர்களின் வழிகாட்டலாலும் அலங்கரிப்பவர்களாகத் திகழ்பவர்கள் எம் பங்கின் அருட்கனிகள்.




இந்த வகையில் எம் பங்கின் விசுவாச வாழ்விற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவர் முதலாவது குருமணியான அருட்தந்தை S.டேமியன் (அ.ம.தி) அடிகளார். அவ்வமையம் அருட்பணியாற்றிய வண.பிதா டிவிற் (அ.ம.தி) அடிகளாரின் வழிகாட்டலில் 1961 இல் தம் அர்ப்பண வாழ்வை ஆரம்பித்த இவர் 1972 சித்திரைத் திங்கள் 2ம் நாள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். பல பங்குகளில் மறை போதகப்பணியாற்றியதுடன் கொழும்புத்துறை ''வசந்தகம்'' நவசந்நியாச மடத்தின் முதனிலை அதிபராகவும் ''நான்'' உளவியல் சஞ்சிகையின் இணை ஆசிரியராகவும் ''சாந்திகம்'' உளவளத்துணை நிலையத்தின் இயக்குனராகவும் உளவியல் கலாநிதிப்பட்டம் பெற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் உளநலத்துறை விரிவுரையாளராகவும் இருந்து உளப்பாதிப்புற்றமக்களுக்கு உளப்பணியாற்றினார். 1997 சித்திரைத் திங்கள் 26ம் நாள் தனது குருத்துவ வெள்ளி விழாவை நிறைவு செய்த இவர் தற்போது பருத்தித்துறை அஞ்சலியகத்தின் இயக்குனராகவிருந்து உளப்பாதிப்புற்ற மக்களின் சேவையறிந்து சேவையாற்றுவது இறைவன் இவருக்களித்த சிறந்த அருளாகும்.



இவரைத் தொடர்ந்து எமது விசுவாசத்தின் விளைநிலத்தின் இரண்டாவது முத்தாகத் திகழ்பவர் அருட்திரு **S. J.** இராஜநாயகம் அடிகளார். 1962 இல் வண.பிதா டிவிற் (அ.ம.தி) அடிகளாரின் வழிகாட்டலில் தம் அர்ப்பண வாழ்வை ஆரம்பித்தார். 1974 வைகாசித் திங்கள் 2ம் நாள் எம் பங்கின் காவலராம் புனித யாகப்பரின் திருவடியிலேயே அவர் தம் நாமம் பூண்ட வண. ஆயர்.மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையால் குருவாக அபிஷேகம் செய்யப்பட்டார். பல பங்குத்தளங்களில் அரும் பணியாற்றிய இவர் குடும்ப நலன் காக்கும் பணிக்கு தம்மை அர்ப்பணித்து 1997 முதல் இன்று வரை அகவொளி குடும்ப வளத்துணை நிலையத்தின் இயக்குனராக திருமணம் எனும் திருவருட்சாதனத்தின் மேன்மையை உணர்த்தும் வகையில் பணியாற்றி வருகின்றார். 1999 இல் வைகாசித்திங்கள் 2ம் நாள் தமது குருத்துவ அர்ப்பணத்தின் 25 வருட நிறைவை பூர்த்தி செய்த இவரின் பணி வாழ்வு சிறக்க இறைவன் அருள் புரிவராக.

*என் மீட்பை அவர்களுக்கு வெளிப்படுத்துவேன்.*



"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறை சாற்றுங்கள்." என்ற இயேசு பெருமானின் அன்பான வார்த்தைகளை விருதுவாக்காக கொண்டு தம்மை இறை பணிக்கென அர்ப்பணித்தவர் தான் எம் பங்கின் இறைபணியாளன் அருட்பணி அ.அன்றூ அடிகளார். அநுராதபுர மறைமாவட்டத்தில் தம்பணிக்கான ஆயத்த வாழ்வை ஆரம்பித்த இவர் 1984 புரட்டாதித் திங்கள் 6ம் நாள் அநுராதபுர மறைமாவட்டத்தில் திருநிலைக்கு உயர்த்தப்பட்ட இவர் 1984 புரட்டாதி-15ம் நாள் தாம் பிறந்த மண்ணிலே எம் பாதுகாவலரின் திருவடியிலே தம் நன்றித்திருப்பலியை தம் மக்களோடு இணைந்து ஒப்புக்கொடுத்தார். இவர் பல பங்குத்தளங்களில் அருட்பணியாற்றியதுடன் அநுராதபுர மறைமாவட்டத்தின் மறைக்கல்வி இயக்குனராகவிருந்து அரும்பணியாற்றினார். தற்போது அநுராதபுர மறைமாவட்டத்தின் குருமுதல்வராக இருந்து அரும்பணியாற்றும் இவரை 2009 புரட்டாதித் திங்கள் 6ம் நாள் தமது குருத்துவ வெள்ளி விழாவை நிறைவு செய்யும் நாளில் இவர் பணி மென்மேலும் சிறக்கவும் இறையருள் நிறைவாகக் கிடைக்கவும் வாழ்த்துகின்றோம்.




விசுவாசத்தின் விளைநிலமாகிய திராட்சையூரிலிருந்து வண.பிதா டெசி அடிகளாரின் வழிகாட்டுதலில் இறை பணிக்கென தம்மை அர்ப்பணிக்க புறப்பட்டவர்தான் எம் பங்கின் நான்காவது குருமகன் அருட்தந்தை J.மரிய செபஸ்ரியன் அடிகளார் ஆவார். 1985 ஆவணித்திங்கள் 6ம் நாள் குருவாக உயர்த்தப்பட்ட இவர் யாழ் மறைமாவட்டத்தில் பல்வேறு பங்குத்தளங்களிலும் அருட்பணியாற்றினார். 1994-1998 காலப்பகுதியில் கிளிநொச்சி மறைக்கோட்டத்தில் குடும்பவளத்துணை நிலையத்தின் இயக்குனராகவிருந்து குடும்பவாழ்வின் விழுமியங்கள் பேணப்பட அரும்பணியாற்றினார். தற்பொழுது இவர் அமெரிக்காவில் அருட்பணியாற்றுவது சிறப்புக்குரியதொன்றாகும்.




எம் விளைநிலத்தில் உதித்த ஐந்தாவது முத்து அருட்பணி அ.ஞானப்பிரகாசம் அடிகளார் ஆவார். 1984 இல் வண.பிதா ஸ்பம்பத்தி அடிகளாரின் வழிகாட்டலில் தம் அர்ப்பண வாழ்வை ஆரம்பித்த இவர் 1993 ஐப்பசி மாதம் 16ம் நாள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். பங்குத்தளங்களில் பங்குத்தந்தையாகவிருந்து அரும்பணியாற்றிய இவர் சிறப்பாக 1992-1996 காலப்பகுதியில் சொந்த மண்ணில் இருந்து எம் மக்கள் இடம் பெயர்ந்த போது அருட்தந்தை யேசுதாஸ் அடிகளாருடன் தோளோடு தோள் நின்று எம் ஆலயத்தை கட்டிக்காத்த பெருமை இவரையே சாரும். போர்க்காலச்சூழலிலும் இரணைப்பாலைப் பங்கில் அரும்பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.




அருட்தந்தை யூட் நிக்சன் அவர்கள் எம் பங்கு ஈன்றெடுத்த ஆறாவது தவப்புதல்வன் ஆவார். அவ்வமையம் புனித ஹென்றியரசர் கல்லூரியின் அதிபராகவிருந்த அருட்தந்தை அன்ரன் இராஜநாயகம் அடிகளார் அவர்களின் வழிகாட்டலில் தம் குருத்துவ அழைப்பின் ஆழத்தை தம்முள்ளே உணர்ந்தவராக 1986 இல் தம் அர்ப்பண வாழ்வை ஆரம்பித்தார். பல்வேறு இழப்புக்கள் மத்தியிலும் அர்ப்பணவாழ்விற்கு பிரமாணிக்கமாய் இருந்த இவர் 1997 ஆவணித்திங்கள் 4ம் நாள் புனித மருதமடு அன்னையின் பதியில் குருவாக அபிஷேகம் செய்யப்பட்டார். மக்களின் தேவையறிந்து சமூகமாற்றங்களுக்கேற்ப தம் பணியினை முன்னெடுத்துச் செல்லும் இவர் பல பங்குத்தளங்களில் அருட்பணியாற்றி தற்பொழுது உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் பங்குத்தந்தையாகவிருந்து பணியாற்றுகின்றார்.



திராட்சையூரிலிருந்து இறைவனின் தோட்டத்தில் பணிபுரிய அழைப்புப்பெற்ற எம்பங்கின் ஏழாவது திருமகன் அருட்பணி பா. பிரான்சீஸ் இராஜசிங்கம் அடிகளார் அவ்வமையம் எம்பங்கின் பங்குத்தந்தையாகப் பணியாற்றிய அருட்தந்தை மைக்கல் T. பற்றிக் அடிகளாரின் வழிகாட்டலில் 1988 இல் இறைபணிக்கு தம்மை அர்ப்பணித்த இவர் 1999 சித்திரைத்திங்கள் 15ம் நாள் குரு நிலைக்கு உயர்த்தப்பட்டார் யாழ் மறைமாவட்டத்தில் பல பங்குகளில் ஆன்மீகப் பணியாற்றும் இவர் தமது நிமிர்ந்த நடை நேர் கொண்ட பார்வையால் அனைவரையும் கவர்ந்திழுத்து பணியாற்றும் திறன் இவருக்கு தனித்துவமானதாகும். ஆத்துடன் இயல் இசை நாடகத்துறையில் அதிக நாட்டமுள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.




தம் மூதாதையரின் விசுவாசவாழ்வின் நற்கனிகளில் ஒன்றாக,எம் மண்ணின் எட்டாவது குருமணியாக உதித்தவர் அருட்பணி டே. இம்மானுவேல் ரட்ணராஜா (அ.ம.தி) அடிகளார் அருட்தந்தை மைக்கல் T. பற்றிக் அடிகளாரின் வழிகாட்டலில் 1987 இல் அமல மரித்தியாகிகள் சபை புனித சூசையப்பர் குருமடம் கொழும்புத்துறையில் தம் அர்பண வாழ்வை ஆரம்பித்தார். 1999 வைகாசித்திங்கள் 29ம் நாள் வண.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் குருவாக அபிஷேகம் செய்யப்பட்டுத் தம் பணியை ஆரம்பித்தார் யாழ் மறைமாவட்டத்தில் மட்டுமல்லாது ஏனைய மறைமாவட்டங்களிலும் அரும் பணியாற்றிய இவர் திக்கெட்டும் சென்று இறையரசைப்பரப்புங்கள் என்ற இறைவாக்கிற்கொப்ப தற்பொழுது இத்தாலி நாட்டிலுள்ள தமிழ் மக்கள் மத்தியில் கிறீஸ்துவின் செய்தியை எடுத்தியம்பும் அருட்பணியாளனாக பணியாற்றுவது சிறப்பானது.



"எளியோர்க்கு நற்செய்தி நவில" என்ற அமலமரித்தியாகிகள் சபையின் விருது வாக்கை தம்மகத்தே கொண்டவராய் அருட்தந்தை றெஜி இராஜேஸ்வரனின் வழிகாட்டலில் தம்மை இறைபணிக்கு அர்பணித்தவர் எம் பங்கின் ஒன்பதாவது குருமகன் அருட்தந்தை யுவேனால் கமலானந்தன் அடிகளார் (அ.ம.தி) 1992 இல் அமல மரித்தியாகிகள் சபை புனித சூசையப்பர் குருமடம் கொழும்புத்துறையில் தமது அர்ப்பணவாழ்வை ஆரம்பித்த இவர் 2004 சித்திரைத் திங்கள் 23ம் நாள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

வவுனியா மறையுரை ஓ்ா் இல்லத்திலிருந்து யாழ் மறைமாவட்டத்தில் மட்டுமல்லாது ஏனைய மறைமாவட்டங்களிலும் குறிப்பாக தமிழ் மக்களின் தேவையறிந்து கிறீஸ்துவின் செய்தியை எடுத்தியம்பும் மறையுரைஞராக பணியாற்றி வருகின்றார்.



துறவற வாழ்வில்மிகுந்த நாட்டமும் ஆர்வமும் கொண்டவராய் 1996இல் பிரான்சிஸ்கன் சபை (பத்திரமுல்ல, இசுருபாய) இல் தம்மை இணைத்துக் கொண்டவர் எம் பங்கின் பத்தாவது முத்து அருட்பணி ஹிப்பொலிற்றஸ் வினோதர்சன் பெனடிக்ற் (O.F.M) அடிகளார்.


பிரான்சிஸ்கன் சபையில் தம்துறவு வாழ்வை ஆரம்பித்த இவர் 2002 ஆவணித்திங்கள் 22ம் நாள் நித்திய வாக்குத்தத்தம் செய்து கொண்டு தம் விசேட பணிக்காக குருத்துவப்பணியைத் தெரிந்தார். 2007 வைகாசித்திங்கள் 12ம் நாள் அநுராதபுர மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு நோபட் அன்றாடி (அ.ம.தி) ஆண்டகை அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். தற்போது தலங்கம தெற்கு, புனித தடி அருளப்பர் ஆலயத்தில் அருட்பணியாற்றி வருகிறார்.



எம் பங்கின் முதலாவது அருட்சகோதரியாக அருட்பணிக்கு தம்மை அர்ப்பணித்தவர் அருட்சகோதரி ஆன்மேரி (திருச்சிலுவைக்கன்னியர் சபை) 1967இல் இந்தியாவில் துறவற வார்த்தைப்பாட்டை எடுத்துக்கொண்ட இவர் எம் தாய் திருநாட்டின் பல பகுதிகளிலும் மக்களின் தேவையறிந்து பணியாற்றி வருகின்றார் "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்பதை தம் இலக்காகக்கொண்டு உன்னதமான தாதிப்பணிக்கு தம்மை அர்ப்பணித்து இன்முகத்துடன் பணிபுரிவது இவருக்கே உரித்தான பண்பாகும்.



மிக நீண்ட கால இடைவெளியின் பின்னர் இறைபணிக்கு தம்மை அர்ப்பணித்தவர் அருட்சகோதரி மேரி பிறெமில்டா அவர்கள் (அப்போஸ்தலிக்க கார்மேல் சபை) 1994ம் ஆண்டு கரவெட்டி லூட்ஸ் கன்னியர் மடத்தில் தமது அர்ப்பணவாழ்வை ஆரம்பித்த இவர் 1999 தைத்திங்கள் 19ம் நாள் முதல் வார்த்தைப்பாட்டைப் பெற்றார் கொழும்பு, மன்னார், கம்பஹா ஆகிய இடங்களில் பணியாற்றிய இவர் தற்பொழுது இத்தாலி நாட்டில் தம் பணியை தொடர்கிறார்.



அருட்சகோதரி பாமினி (திருச்சிலுவை கன்னியர் சபை) அவர்கள் எம் தலத்திருச்சபையின் மூன்றாவது அருட்சகோதரியாவர். 2000ம் ஆண்டு கொழும்புத்துறை திருச்சிலுவைக் கன்னியர் சபையில் தம் துறவு வாழ்வை ஆரம்பித்த இவர் 2005 தைத்திங்கள் 14ம் நாள் முதல் வார்த்தைப்பாட்டைப்பெற்றார். யாழ்ப்பாணம், வவுனியா,கொழும்பு,மடு போன்ற இடங்களில் நலிவுற்ற மக்களுக்காக அரும் பணியாற்றிய இவர் தற்போது பாகிஸ்தான் திருக்குடும்ப கன்னியர் வைத்தியசாலையில் பணியாற்றி வருகிறார்.

எம் ஆலய வளர்ச்சியில் 130 ஆண்டு காலப்பகுதியில் எம் தந்தை புனித யாகப்பர் பத்து அருட் குருக்களையும். மூன்று அருட் சகோதரிகளையும் பெற்றெடுத்த பெருமைக்குரியவராகின்றார். தற்கால நவீன உலகப் போக்குகள் சவால்கள் மத்தியிலும் இறைபணிக்கு தம்மை அர்ப்பணித்த இவர்கள் எம் பங்கின் "விசுவாசத்தின் விளை நிலத்தின் முத்துக்கள்" இவர்கள் பணி மென்மேலும் சிறக்கவும் நலம் பெற்று பல்லாண்டு வாழவும் மேலும் பலர் தம்மை அருட்பணிக்கு அர்பணிக்கவும் இறையாசீர் வேண்டி நன்நாளாம் இந்நாளில் வாழ்த்துகின்றோம்.

"இறையன்பரே ஆண்டவரைப் புகழ்ந்து பாடுங்கள் தூயவராம் அவரை நினைத்து நன்றி கூறுகின்றோம்" (தி.பா.30:4)

**திருமதி இ. யூட் ஜெயக்காந்தன்**

# Pomona priest from Sri Lanka grateful for aid

## Almost $60,000 received for tsunami victims

By SARA A. CARTER
STAFF WRITER

Thousands of miles away, on the northern shores of Sri Lanka, the people of Father Joseph Sebasty's village have a reason to smile again.

The Pomona priest from Sri Lanka, who watched his country's devastation on television Dec. 26, said he has found hope through the generosity of residents in the Inland Valley.

The nearly $60,000 he has received from local church donations and residents already has had an amazing impact on the villages of his former homeland, he said.

Generosity has sustained his hope in the world and strengthened his faith in God, he said.

"I didn't expect this," he said from his small office at St. Madeleine's Catholic Church. "People here really appreciate the pain and suffering of my people in Sri Lanka. Their generosity will feed, cloth and counsel all those who are still suffering."

Sri Lanka's small, predominantly Catholic population in the northeast part of the country is benefiting from the donations, which have provided immediate assistance with food, clothing and medicine to thousands who were rendered homeless.

The donated money is being administered through Sri Lanka's Catholic bishop, Thomas Savundaranayagam, who has helped set up 46 refugee camps aiding some of the 170,000 homeless people in the country. Each camp has about 2,000 people, Sebasty said.

The villages suffered great loss of life, and livelihoods also were washed away by the water – boats, fishing nets and tools are scarce, Sebasty added.

About 40,000 people in the country were killed, including 6,000 from Sebasty's northern home. Most of the dead were women and children; another 2,000 are still unaccounted for and presumed dead, Savundaranayagam said. Plans to rebuild villages and acquire equipment for fishermen will begin in the next three to six months, he said.



Joseph Sebasty raised funds in the Inland Empire that were put to use in his native home of Sri Lanka.

**TSUNAMI RELIEF**

**To donate:**
St. Madeleine's Catholic Church
931 E. Kinsley Ave.
Pomona, 91767-5098

"We are grateful to you for your generous contributions," Savundaranayagam wrote to residents of the Inland Valley. "Father Sebasty has told us about your anxiety and concern for our people, especially the care of the children affected by the tsunami ... They were rescued and brought to safe places away from the sea. They were given food, medicine and clothes, and cared for immediately."

Some of the money is being used for counseling services, though most counselors are assisting on a voluntary basis, he said.

Many who survived the devastation now have a deep fear of being near the water, Sebasty said. That presents a serious problem for those whose lives depend on the ocean.

"For now, they are scared to see the sea," he said.

On Thursday, the smiling priest sat at his desk, looking at more than 200 thank-you cards he had written to residents who donated money. Organized in neat piles were the copies of checks donated to the relief efforts, and letters sent from the bishop, which he carefully folded into thirds along with his own. His big, brown eyes stared at the hundreds of names of people he had never met, and his smile got bigger.

"Strangers," he said. "They are saving people's lives so far away."

"After the story was told in the paper," he said, "so many churches and residents began to give money. It was amazing the amount. It will help many people. I hope that we don't forget how much was lost and that people continue with their generosity."

Sebasty received a letter from Pethuru Lourthu, a longtime friend who grew up with him in Sri Lanka. Lourthu, who lives in Canada, left his home the past month to help with rebuilding efforts in his native country.

He sent photographs to Sebasty of sandy beaches where scattered slabs of cement are the only signs that the land was once inhobited.

As he shuffled through the photos, Sebasty stopped and looked at a picture of St. Philip Neri, the patron saint considered a protector for the people of his village. For as long as Sebasty could remember, the saint guarded the shores of the north. His statue stood high on the edge of the water warming the hearts of the faithful.

After the tsunami hit, the icon was gone – or so it was thought, Sebasty said.

Two weeks ago, Lourthu found the statue – standing upright, cross in hand and facing the sea – a half-mile from its original home. St. Philip Neri was in perfect condition.

Finding the icon, trapped in the cement foundation where a home once stood, was like a miracle amid the disaster, Sebasty said.

"This disaster gives us the message that we are not all powerful," Sebasty said. "The saint, however, gives us hope. He will be moved back to where he was and will watch over the fishermen once more. The future of Sri Lanka will be in the hands of God and our blessed mother."

Sebasty's work is just starting. Devastated areas in Sri Lanka, India and Indonesia cannot be rebuilt in a day, and he prays that people will continue to remember his country, he said.

# Pomona priest struck by tragedy

## Family members, thousands from his village in Jaffna, Sri Lanka killed



THERESE TRAN • STAFF PHOTOGRAPHER

The Rev. Joseph Sebasty of St. Madeleine's Catholic Church in Pomona headed four churches in Sri Lanka near the ocean with 13,000 parishioners. The churches were destroyed and many of his parishioners were swept away by the tsunami.

By SARA A. CARTER
STAFF WRITER

POMONA — The ocean rose like an enormous wall of glass swallowing 268 members of Father Joseph Sebasty's extended family Dec. 26. It was the most tragic day in his life, he said.

In the early morning hours after most church services were concluded in Jaffna, Sri Lanka, the sea reclaimed not only Sebasty's family members but nearly 13,000 of the residents of the fishing villages who live on the bend.

A priest at St. Madeline's Catholic Church in Pomona, Sebasty spent nearly 17 years in his country of origin, as a pastor of four different parishes along the coast of Sri Lanka.

On Dec. 29, Sebasty received an e-mail that changed his life forever. Rev. Father Jacob Nicholas, vicar general of the Catholic Diocese in Sri Lanka, sent a plea from the destruction on the northern part of the island.

The people in the coastal areas heard a noise like a bomb blast in the sea, Nicholas said, who resided on higher ground. Some of the villages were completely wiped out. The majority of the dead he said were babies, children and women.

**PRIEST** continues on **A6**




அவருக்கு நன்றி செலுத்தி அவர் பெயரைப் போற்றுங்கள்.

# PRIEST

• FROM A1

This past Sunday, at a church service, Sebasty spoke of his country, the resiliency of his people, and the destruction of the tsunami. His story of hope moved the more than 200 parishioners attending service to place more than $13,000 in the offering baskets that day.

The fishing village of Mullaithivu, which was rebuilt two years ago after Sri Lanka's ethnic wars, was destroyed. Five others seemed to disappear off the face of the planet in an instant. Many of these villages were where Sebasty preached to the Catholic minorities of his homeland.

Nicholas told of the urgent need for immediate assistance. And Sebasty grieved from his office thousands of miles away. He remembered, perfectly, the smiling faces of his family, friends and parishioners who had perished, and knew he would never see them again.

And for those who survived the raging sea, he promised in prayer to find a way to help.

He did to some extent in the generosity of the people in Pomona. The money donated was wired directly to Sri Lanka to assist the survivors with immediate needs. Bishop Thomas Savundaranànyagam responded that the money donated went directly to the survivors who were sheltered at the various Catholic schools in the area.

"I feel their (people of Sri Lanka) strong faith," Sebasty said from inside the chapel.

On Thursday, he sat with the children of St. Madeleine's School, with poster boards of photos from his homeland's destruction, and taught them meaning of hope.

"We always enjoyed the beauty of the sea. From our island nation we could see the sun rise and the sun set. But I cried with my heart when I heard what the sea had taken away," he said.

But Sebasty's faith was an inspiration to many in the community. Even Fr. Alex Aclan, senior pastor of the church, said he gained strength from Sebasty.

"I believe I worried more than him," Aclan said. Sebasty smiled. In fact, Sebasty smiled most of the time, being consoled by his deep faith in God and humanity.

"Even when someone is mad at me, I smile," Sebasty said. "We are a smiling people."

The majority of people who live in the northern villages are Catholics, he said. They still suffer – homes, schools and the basic necessities of life will take years to rebuild.

Any money donated to Sebasty's northern villages will be immediately sent by wire to be distributed among the people for rebuilding their communities.

"It will take years," he said. "I hope the people of America do not forget my people when reports start to fade. They can not do it alone and it will take years for life to get back to normal."

*Sara A. Carter can be reached by e-mail at sara.carter@dailybulletin.com or by phone at (909) 483-8552.*

## INFORMATION


■ For information on how to help the northern villages in Sri Lanka, contact St. Madeleine's Catholic Church, (909) 629-9495.

■ To aid in the relief effort, send a check designated to "Fr. Joseph Sebasty's Relief Fund," St. Madeleine, 931 E. Kingsley Ave. Pomona, 91767-5098

ஆண்டவரின் ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருட்பொழிவு செய்துள்ளார்.













உம் கைகளே என்னை உருவாக்கின, என்னை வடிவமைத்தன.















உம் கட்டளைகளை நாம் கற்றுக்கொள்ள எமக்கு மெய்யுணர்வு தாரும்.








என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு. என் பாதைக்கு ஒளியும் அதுவே.






















அதிசமானவர் ஆறுதல் தருகிறார்












சர்வ வல்லவர் சமாதானம் தருகிறார்



**Dr. Paul Healthy Life Clinic**

**HOMEOPATHY & ACUPUNCTURE**

**Dr. Paul Joseph,** B.H.M.S.(India), H.D.(Canada), R.A.P.

*(Bachelor of Homeopathic Medicine and Surgery)*

**1193A Brimley Road, Unit 10, Scarborough, Ontario M1P 3G5**

**Tel: 416 438 3939 Cell: 416 986 4903 Fax: 416 438 3909**

e-mail:drjp63@yahoo.com

- Qualified from Tamil Nadu Dr. M.G.R. Medical University, Madras, India.
- Doctor of Homeopathy (Canada)
- Registered Doctor of Acupuncture (Canada)
- Former Professor - Homeopathy Medical Colleges, Dr. M. G. R. Medical University, India
- Head of Department - Homeopathy & Acupuncture, Shanmuga Medical Research Foundation, India
- Twenty years of experience in the field of medicine
- Specialist in Homeopathy Medicine, Acupuncture, Pulse Diagnosis, Acupressure, Scientific Meditation, Yoga and counselling

**Treatment for all chronic diseases**


# என்மூலம் வாழ்த்துக்களைத் தெரிவித்த அன்பு உறவுகள்

அருட்தந்தை அருள்நேசன், பங்குத் தந்தை, ரொறன்ரோ
அருட்தந்தை அருள், இந்தியா
பாஸ்டர் சந்திரகாந்தன், TCPC, கனடா
போதகர் போல் ராஜ், இயேசுமாறாதவர் திருச்சபை, கனடா
பாஸ்டர் யோசேப் சவெரிமுத்து, MCWC, கனடா
டாக்டர் பன்னீர்செல்வம், MBBS, MS, சண்முகா மருத்துவமனை, சேலம்
திருமிகு சோலை இருசன், மூத்த பத்திரிகை ஆசிரியர், சேலம்
திருமிகு சிவபாதசுந்தரம், பாண்டிச்சேரி
திருமிகு தமிழரசன், MA, BL, (M.Phil) வழக்கறிஞர், சேலம்
திருமிகு இராமசந்திரமூர்த்தி குடும்பத்தினர், டென்மார்க்
திருமிகு தர்மராஜா குடும்பத்தினர், கனடா
திருமிகு பற்றிக் செபஸ்ரி குடும்பத்தினர், மொன்றியல்
திருமிகு A. T. ஜோர்ஜ் குடும்பத்தினர், கனடா
திருமிகு தூரைநாதர் இராசேந்திரம், கனடா
திருமிகு அன்ரன் பெனடிக்ற் குடும்பத்தினர், கனடா
திருமிகு சற்குணம் - விசாகன் குடும்பத்தினர், கனடா
திருமதி கௌரி சித்திரவேல், பாமா குடும்பத்தினர், கனடா
திருமிகு இளவாலை சந்திரா குடும்பத்தினர், கனடா
திருமிகு லிங்கம் நடராஜா குடும்பத்தினர், கனடா
திருமிகு பொனி குடும்பத்தினர், கனடா
திருமிகு இந்திரன் மற்றும் கிருபா குடும்பத்தினர், கனடா
திருமிகு கணேசன், கனடா - மோகனன், சென்னை
திருமிகு கண்ணன் ஜெயவதி குடும்பத்தினர், கனடா
திருமதி அருள்சக்தி, செல்வி சர்மி, டாக்டர் போல் கிளினிக் உதவியாளர்கள்
திருமிகு சிந்தனைப் பூக்கள் பத்மநாதன், திரு. சிவலோகநாதன், கனடா
திருமிகு ஆனந்தகிருஷ்ணன், குவாலிற்றி பிறின்ரிங், கனடா
திருமிகு சாம்சன் குடும்பத்தினர், சேலம்
திருமிகு காந்தன் சொர்ணலதா குடும்பத்தினர்
திருமதி லீலா சிவானந்தன் குடும்பத்தினர்
திருமிகு நடா. ராஜ்குமார் மற்றும் கீதவாணி வானொலி கலைஞர்கள், கனடா
புனித யாகப்பர் ஆலய உறவுகள் - பிரான்ஸ், லண்டன், இத்தாலி, ஜேர்மன், கனடா

Amen

# தாய்மண்ணில் வெள்ளிவிழா நிகழ்வு 07.08.2010


















07/08/2010 08:49



07/08/2010 08:53


07/08/2010 08:54


07/08/2010 08:59


07/08/2010 08:57


07/08/2010 08:58 AM


St. James' Church, Ilavalai.
25